Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 36 | கதிர் : 324 | வியாழக்கிழமை | ஐப்பசி 04 ஆம் நாள் 21 ஒக்ரோபர் 2021 | வள்ளுவர் ஆண்டு 2053 | பக்கங்கள்: 16 | விலை : ரூ.30 | செய்தி : 021 493 0000 | விளம்பரம்: 021 493 1111


## தொற்று 537 சாவு 18

விரிவு 15

போரின்பின்னர்

## வடக்கு- கிழக்கை அரசாங்கம் அடிமை நாடாகவே நிர்வகிக்கிறது!

### விக்னேஸ்வரன் எம்.பி. சுட்டிக்காட்டு 'கூட்டுச் சமஷ்டி'தான் தீர்வு என்றும் உறுதி



யாழ்ப்பாணம், ஒக். 21

வடக்கு -கிழக்கு மாகாணங்களிலிருந்து இராணுவத்தை வெளியேற்றினால்தான் தமிழர் தாயகம் உய்யும். போரின் பின்னர் அரசாங்கம் வடக்கு- கிழக்கை அடிமை நாடாகவே நிர்வகித்து வருகின்றது. உள்நாட்டுப் பிராந் திய பாதுகாப்பு கூட்டுச் சமஷ்டி முறையில்

15

## கொரோனா பரவுமானால் மீண்டும் வரும் முடக்கம்!

மக்களின் நடவடிக்கையில்தான் இறுதி முடிவு

கொழும்பு, ஒக். 21

"மக்களின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக நாட்டில் மீண்டும் கொரோனா வைரஸ் பரவினால் நாட்டை முடக்குவதைத் தவிர வேறு மாற்றுத் தெரிவுகள் இல்லை."

இவ்வாறு சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் விசேட மருத்துவ நிபுணர் ஹேமந்த ஹேரத் எச்சரிக்கை விடுத்தார்.

நேற்று ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கொரோனா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டு நிலைமையில் உள்ளது என்பதற்காக நாம் சகல சவால்களிலிருந்தும் விடுபட்டுவிட்டோம் என அர்த்

15

## கிளிநொச்சி விபத்தில் முதியவர் சாவு !

கிளிநொச்சி, ஒக். 21

இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதுண்டு இடம் பெற்ற விபத்தில், மோட்டார் சைக்கிள் ஒன்றில் பயணித்த

15

## மாகாணத் தடை 31வரை நீடிப்பு

விரிவு 15

- பருவப் பெயர்ச்சி மழை அதிகம்
- 5 தாழமுக்கங்கள் ஏற்பட வாய்ப்பு

# வடக்கில் இந்த வருடம் வெள்ளப்பெருக்கு அபாயம்!



யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 21

இந்த ஆண்டுக்கான வடகீழ் பருவப் பெயர்ச்சி மழை நாளை ஆரம்பமாகவுள்ளதுடன், 6 சுற்றுக்களாக மழை கிடைக்கப்பெறும். அத்துடன், இந்த மழையின் செறிவு உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

15

## 25ஆம் திகதியிலிருந்து ஆசிரியர்கள் பணிபுரிவர்

கல்வி அமைச்சின் செயலர் நம்பிக்கை

கொழும்பு. ஒக். 21.

"எதிர்வரும் 25 ஆம் திகதி முதல் ஆசிரியர்கள் நிச்சயம் சேவைக்கு சமுகமளிப்பார்களென நம்புகின்றேன்" என்று- கல்வி அமைச்சின் செயலாளர் கபில பெரேரா தெரிவித்தார்.

15

## புலனாய்வாளர்கள் தாக்கியதில் ஒரு மீனவர் மருத்துவமனையில்

யாழ்ப்பாணம், ஒக். 21

வேலணை, துறையூர் பகுதியில் கடற்படை புலனாய்வாளர்கள் நடத்திய தாக்குதலில் மீனவர் ஒருவர் காயமடைந்து, யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். பூநகரி, வெட்டுக்காடு, கோவி

15

## பட்டப்பகலில் வீடு உடைத்து 15 ½ பவுண் நகைகள் திருட்டு

யாழ்.ஆனைக்கோட்டையில் சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக். 21

ஆனைக்கோட்டையில், வீடுடைத்து 15 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளும்,18 ஆயிரத்து 500 ரூபா பணமும் திருடப்பட்டுள்

12

## வழிப்பறிக் கொள்ளையர் நான்கு பேர் கைதாகினர்

நகைக்கடை உரிமையாளரும் கைது




யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணத்தில் வீதியில் சென்றவர்களின் தங்க நகைகளை அபகரித்துச் சென்றனர் என்ற குற்றச்சாட்டில் மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

12

## நல்லிணக்கம்தான் இலங்கையில் தேவை

பீரிஸிடம் பிரான்ஸ் நாட்டுத் தூதுவர் நேரில் சுட்டிக்காட்டு



கொழும்பு, ஒக். 21

"இலங்கையில் நல்லிணக்கம் நிலவ வேண்டும். இதற்குப் பிரான்ஸ் தன்னாலான ஒத்துழைப்புக்களை வழங்கும்." - என்று, இலங்கைக்கான பிரான்ஸ் தூதுவர் எரிக் லாவெர்டு, இலங்கை

12

## இன்றும் நாளையும் வருமாறு ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்தோம்

கிளிநொச்சி அதிபர்கள் சங்கம் முடிவு

கொடிகாமம், ஒக். 21

பாடசாலைகளுக்கு இன்றும் நாளையும் சமுகமளிக்குமாறு எந்தவொரு ஆசிரியருக்கும் எந்தவொரு அதிபருக்கு அழுத்தம் கொடுக்கப் போவதில்லை என்று கிளிநொச்சி

12

# ஆசிரியர்களின் போராட்டத்தை எவராலும் தடுக்கவே முடியாது

## அச்சப்படத்தேவையில்லை என்று இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவிப்பு

**யாழ்ப்பாணம், ஒக். 21**
**இன்றும், நாளையும் இடம்பெறும் ஆசிரியர்கள், அதிபர்களின் போராட்டத்தை எவராலும் கட்டுப்படுத்தவோ அல்லது அச்சுறுத்தவோ முடியாது. அதிபர்கள், ஆசிரியர்களுக்குப் பாதகமான எந்தவொரு முடிவையும் எவராலும் எடுக்க முடியாது என்று இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்துள்ளது.**

ලංකා ගුරුසේවා සංගමය
இலங்கை ஆசிரியர் சேவை சங்கம்
Ceylon Teachers Service Union
259/9, Sethsiri Mawath, Koswatte, Thalangama

இது தொடர்பில் அந்த அமைப்பு விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

எதிர்வரும் 21ஆம், 22ஆம் திகதிகளில் (இன்றும் நாளையும்) பணிப்புறக்கணிப்பில் அதிபர் ஆசிரியர்கள் பங்கு பற்றுவது தொடர்பாக நீங்கள் தனித்தனியாக எவருக்கும் அறிவிக்கத் தேவையில்லை. விடுமுறை எதனையும் நீங்கள் வழங்க வேண்டிய அவசியமும் இல்லை. தொழிற்சங்க கூட்டமைப்பாக தொழில் திணைக்களத்தின் ஊடாக, கல்வி அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அதிபர்களோ ஆசிரியர்களோ தனித்தனியாக ஒவ்வொரு கல்வி வலயங்களுக்கோ மாகாணக்கல்வித் திணைக்களங்களுக்கோ அறிவிக்க வேண்டிய தேவை இல்லை. இந்த விடயம் தொடர்பாக நீங்கள் எந்தவிதத்திலும் அச்சப்படத் தேவையில்லை.

தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடும் உரிமை, தமது உரிமை மறுக்கப்பட்ட அனைவருக்கும் உள்ளது. உரிமை மறுக்கப்படும் ஒருவர் போராடும்பொழுது, அவ்விடயம் தொடர்பாக அவர் தொழிற்சங்கம் ஒன்றில் உறுப்பினராக அல்லாதவராகவும் இருக்கலாம். இந்த விடயம் தொடர்பாகவும் எவரும் அச்சப்படத் தேவையில்லை.

இன்னும் மேலதிகமாக, ஆசிரியர்களின் சம்பள முரண்பாட்டுத் தீர்வு தொடர்பாக உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை இதுவரை நடைமுறைப்படுத்தாத அரச தரப்பால் எந்தவொரு பாதகமான முடிவையும் அதிபர், ஆசிரியர்களுக்கு எதிராக எடுக்கவும் முடியாது. தொழிற்சங்க உரிமை தொடர்பாக, பணிப்புறக்கணிப்பில் ஈடுபடும் உரிமையை சட்டம் அனுமதிக்கிறது. எனவே அரசியல்வாதிகள் கூறுவது போன்று ஆசிரியருடைய சம்பளங்களை நிறுத்தவோ அல்லது வேறு வகைகளில் தொழில் அச்சுறுத்தல் விடுக்கவோ முடியாது.

எனவே, இவ்வாறான சட்டவிரோதமான அச்சுறுத்தல்களுக்கு எவரும் பயப்படத் தேவையில்லை. உங்களின் சகல விதமான தொழில் பாதுகாப்புகளுக்கும் அதிபர், ஆசிரியர்கள் தொழிற்சங்கள் பொறுப்பெடுத்தே தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு உள்ளன. உங்களுடன் எவரும் அச்சுறுத்தும் கோணத்தில் அணுகுவார்களாயின், நீங்கள் தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகக் கூறி, 0773112541, 0777246222, 0718297022, 0777685038, 0713280729, 0773080729, 0770768949 ஆகிய தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு விடயத்தைத் தெரிவியுங்கள் என்றுள்ளது. (ம-159)



குஷிநகர் சர்வதேச விமான நிலையத்தின் திறப்பு விழாவுக்கு நேற்றுச் சென்ற அமைச்சர் நாமல் ராஜபக்ச, சிங்கள மொழியில் எழுதப்பட்ட பகவத் கீதை புத்தகத்தை, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் கையளித்தார். (ஒ-4)



# யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உத்தியோகபூர்வ இணையம்

யாழ்ப்பாணம், ஒக். 21
யாழ். மாநகர சபையின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தின் அங்குரார்ப்பண நிகழ்வு நேற்று மு.ப. 10 மணிக்கு யாழ். பொதுநூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த உத்தியோகபூர்வ இணையத்தளமானது யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணனால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. யாழி நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான கஜமுகன், இந்த இணையத்தளத்தை இலவசமாக வடிவமைத்துக் கொடுத்தார். இந்த இணையத்தளத்தின் முகவரி http://jaffna.mc.gov.lk ஆகும். (ம-27)

# பாடசாலைகள் ஒன்றும் இராணுவக் காப்பரணல்ல

## அபிவிருத்தி அலுவலர்களை நியமிக்கும் திட்டத்துக்கு ரெலோ அமைப்பு கண்டனம்

கொழும்பு, ஒக். 21
தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் ஆசிரியர்கள் அதிபர்களுக்கு மாற்றீடாக அபிவிருத்தி உத்தியோகத்தர்களை நியமிப்பது என்று அரசு அறிவித்திருப்பது நாட்டின் முதுகெலும்பில் ஒன்றான கல்வியையும் சீரழிக்கும் முயற்சி என்று ரெலோ அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

நாட்டினுடைய முதுகெலும்பில் ஒன்றான விவசாயத்தை ஒட்டுமொத்தமாக சீரழித்து பஞ்ச நிலைமைக்கு இட்டுச் சென்றிருக்கிறது அரசு.

சர்வதேச நாடுகளை எடுத்தெறிந்து திறைசேரியை வங்குரோத்தாக்கிப் பிணைமுறிகளை விற்க முடியாமல், அளவு கணக்கில்லாமல் காசு அச்சடிக்கும் நிலைமைக்கு நாட்டை தள்ளியுள்ளது அரசு.

அரசு நாட்டின் இன்னொரு முதுகெலும்பான ஆடை ஏற்றுமதி தொழிலை முடக்குகின்ற அபாய நிலையை தோற்றுவித்திருக்கிறது.

தற்போது நாட்டின் முதுகெலும்பில் ஒன்றாகத் திகழ்கின்ற கல்வியையும் சீரழிக்க முற்பட்டிருக்கிறது அரசாங்கம். அதிபர்களும் ஆசிரியர்களும் சம்பள உயர்வு கோரி தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபட்டு இருக்கிறார்கள். ஜனநாயக முறைகளை பின்பற்றி அரசியல் நோக்கங்களோ கலப்படமோ இல்லாத போராட்டம். இதற்கான தீர்வுப் பேச்சின் மூலம் எட்டப்படவேண்டும். அதை விடுத்து வேறு அரச அதிகாரிகளை அவர்கள் இடத்துக்கு நியமிப்போம் என்று ஏட்டிக்குப் போட்டியாக நடப்பதென்பது அரசினுடைய முறை அல்ல என்பதை அரசு தெரிந்து கொள்ள வேண்டும்.

எண்ணிக்கை கணக்குக்காக வேறு ஆள்களை நிறுத்துவதற்கு பாடசாலைகள் இராணுவக் காப்பரண்கள் அல்ல. மாறாக நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கின்ற சந்ததியை வளர்க்கின்ற கல்விக்கூடங்கள். இதை பயிற்றப்பட்ட ஆசிரியர்களால் தான் நடத்த முடியும். விதண்டாவாத போக்குகளின் மூலம் ஏற்கனவே நாட்டை அதலபாதாளத்தில் தள்ளி இருக்கும் அரசு கல்வியையும் சீரழிக்க முற்படுகின்ற நடவடிக்கையாகவே இதை நாம் நோக்குகிறோம் - என்றுள்ளது. (ம)

### கிளிநொச்சி மாவட்டச் செயலர்

# ஆசிரியர்களின் பணியை சிறுமைப்படுத்துகின்றார்

## முன்னாள் கல்வி அமைச்சர் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஒக். 21
கிளிநொச்சி மாவட்டச் செயலரின் கருத்து, அவர் தன் அதிகாரத்தை மீறிச் செயற்படுகின்றாரோ என்று எண்ணவைப்பதுடன் ஆசிரியப் பணி எவராலும் செய்யக் கூடியதொன்று என்று சிறுமைப்படுத்தும் விதமாகவும் அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார் வடக்கு மாகாணத்தின் முன்னாள் கல்வியமைச்சரும் ஈ.பி.ஆர்.எல்.எவ். துணைச் செயலாளருமான கலாநிதி கந்தையா சர்வேஸ்வரன்.

அவர் அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-


அதிபர்கள், ஆசிரியர்கள் தமது சம்பள முரண்பாட்டுக்கான தீர்வைக்கோரி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறிருக்க, 21ஆம் திகதி (இன்று) வருகின்ற மாணவர்களை வரவேற்பதற்கு ஆசிரியர்கள் வராவிட்டால் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை அனுப்பி ஆசிரியர்களுக்குப் பதிலாக பாடசாலையை நடத்துவேன் என கிளிநொச்சி மாவட்டச் செயலர் விடுத்திருக்கும் அறிக்கையானது அதிர்ச்சியையும் ஆச்சரியத்தையும் அளிக்கிறது. காரணம் 21ஆம் திகதியும் போராட்டம் தொடருமானால் அடுத்த நடவடிக்கையைத் தீர்மானிக்க வேண்டிய பொறுப்பும் கடமையும் மாகாண ஆளுநருக்கும், மாகாண கல்வி அமைச்சுக்குமே உரியது.

ஆகவே, கிளிநொச்சி மாவட்ட செயலரின் அறிக்கையானது அவர் தனது அதிகார வரம்புக்கு அப்பால் செல்கின்றாரோ என்ற சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. மேலும், மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை தற்காலிகமாக ஆசிரியர்களாகப் பயன்படுத்துவேன் என அவர் கூறியிருப்பதானது, ஒருபுறம் அபிவிருத்தி உத்தியோகத்தர்களை வேலையின்றி சம்பளம் எடுக்கின்ற அலுவலர்களாக சிறுமைப்படுத்துகின்ற செயற்பாடாக அமைவதுடன் மறுபுறம் எவர் வேண்டுமானாலும் ஆசிரியர் பணியை செய்யலாம் என்ற தோரணை வெளிப்படுவதானது ஆசிரியர் தொழிலையும் சிறுமைப்படுத்துவதாக அமைகின்றது.

இவற்றுக்கு மேலாக மாவட்ட செயலரின் முடிவானது ஆசிரியர்களையும் நிர்வாக உத்தியோகத்தர்களான பிரதேச செயலர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் மோதவிடுகின்ற தவறான அணுகுமுறை என்பதை கற்றறிந்த அனுபவமிக்க மாவட்டச் செயலர் புரிந்துகொள்ளத் தவறியமை கவலையளிக்கிறது - என்றுள்ளது. (ம)

# நகுலேஸ்வர சிறாப்பர் மடத்தில் பிள்ளையார் சிலை பிரதிஷ்டை

**யாழ்ப்பாணம்,ஒக்.21**
**யாழ்ப்பாணம் கீரிமலை நகுலேஸ்வர சிறாப்பர் மடத்தில், புராதன பிள்ளையார் சிலை ஒன்று சமய முறைப்படி நேற்று பிரதிஷ்டை செய்யப்பட்டது.**





போரின்போது உயர் பாதுகாப்பு வலயத்துக்கு உட்பட்டிருந்த கீரிமலை நகுலேஸ்வர ஆலயம் உட்பட்ட பல சைவ சமய ஆலயங்கள், சைவசமய மரபுரிமைச் சின்னங்கள் அழிவடைந்தன. இந்த நிலையில் சிறாப்பர் மடத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் தொல்லியல் திணைக்களத்தால், மரபுரிமைச் சின்னமாக அடையாளப்படுத்தப்பட்டு சுற்றுவேலிகள் அமைக்கப்பட்டிருந்தன. இதனையடுத்து அதனை மீள் வடிவமைப்புக்குட்படுத்த, சுப்பிரமணியர் கதிரவேலு (சிறாப்பர்) குடும்பத்தின் நேரடி வாரிசுகள் நிதிப்பங்களிப்பை வழங்கினர். அதற்கமைவாக சிறாப்பர் மடத்தில் காணப்பட்ட பழமை வாய்ந்த பிள்ளையார் சிலை, மீள அதே இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டது.

நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலைப் பேராசிரியர் புஸ்பரட்ணம், கலாநிதி ஆறு. திருமுருகன், தொல்லியல் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட புனர்நிர்மாண உத்தியோகத்தர் கபிலன், வலி. வடக்குப் பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன், மாவிட்டபுரம் கந்தசுவாமி ஆலயக் குருக்கள், கீரிமலை நகுலேஸ்வர ஆலயக் குருக்கள், சிறாப்பர் குடும்பத்தின் நேரடி வாரிசு சார்பில் கௌரி பொன்னையா, தொல்லியல் திணைக்கள உத்தியோகத்தர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் சிறாப்பர் மடத்தினுடைய வரலாறுகள் தெளிவுபடுத்தப்பட்டன. (4-125)

## நாடாளுமன்றத்துக்கு செல்வார் கோத்தா?

கொழும்பு, ஒக். 21
நாடாளுமன்றம் இன்று முற்பகல் 10 மணிக்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமையில் கூடவுள்ளது. சபாநாயகர் அறிவிப்பு, பொது மனுத்தாக்கல் உள்ளிட்ட ஆரம்பக்கட்ட சபை நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னர், பிரதான சபை நடவடிக்கை ஆரம்பமாகும்.

இதன்போது இரு திருத்தச்சட்டவரைவுகள் மற்றும் ஒரு ஒழுங்குவிதி ஆகியவற்றை நீதி அமைச்சர் அலி சப்ரி சபையில் முன்வைக்கவுள்ளார். அத்துடன், உரப் பிரச்சினை, ஆசிரியர்களின் போராட்டம் உட்பட சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பிலும் எதிரணிகள் கேள்விகளை எழுப்பவுள்ளன. (ஒ-44)

## கொரோனாத் தொற்றால் தென்மராட்சிவாசி சாவு!

சாவகச்சேரி,ஒக். 21
கொரோனாத் தொற்றுக் காரணமாக தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் ஒருவர் உயிரிழந்துள்ளார்.
தனிமைப்படுத்தலில் இருந்த கொடிகாமத்தைச் சேர்ந்த 65 வயது ஆண் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தார்.
தென்மராட்சி பிரதேசத்தில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 34 ஆக அதிகரித்துள்ளது. (ஐ-9)

## சண்டிலிப்பாயில் துப்பாக்கி மீட்பு

யாழ்ப்பாணம், ஒக். 21
சண்டிலிப்பாய் சந்திப் பகுதியில் உள்ள காணியொன்றைத் துப்புரவு செய்தபோது அதிலிருந்து பழுதடைந்த நிலையில் கைத்துப்பாக்கி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.
சம்பவம் தொடர்பில் காணி உரிமையாளரால் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டது.
இதனையடுத்து குறித்த இடத்துக்குச் சென்ற மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை நடத்தியதுடன் துப்பாக்கியையும் மீட்டுச் சென்றனர். (ம-319)



## நால்வர் கைது

யாழ்ப்பாணம்,ஒக்.21
மல்லாகம் நீதவான் நீதிமன்றின் பகிரங்க பிடியாணை உத்தரவுக்கு அமைவாக, நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர். நீதிமன்றின் அழைப்பாணைகளை மீறி வழக்குகளுக்கு சமுகமளிக்காமல் நால்வர் தலைமறைவாகியிருந்தனர். இதனையடுத்து நீதிமன்றால் நான்கு சந்தேகநபர்களுக்கும் எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டது.
இரண்டு சந்தேக நபர்கள் வட்டுக்கோட்டைப் பொலிஸாராலும், மற்றுமொருவர் யாழ்ப்பாணம் பொலிஸாராலும், இன்னொருவர் மானிப்பாய் பொலிஸாராலும் கைது செய்யப்பட்டுள்ளனர். (ஒ - 4125)




**நெடுக உந்த அரசியல் பற்றியும், அதிகாரியள் பற்றியும் சொல்லிக்கொண்டிருக்க உங்களுக்கும் அலுத்துப் போயிருக்கும். அதால இண்டைக்கு வேற ஒரு விசயத்தைப் பாப்பம்.**
**பிணத்தை வைச்சிருந்தாக் கூட அதைவைச்சு எப்பிடி உழைக்கிறதெண்டு எங்கட ஆக்களுக்கு சொல்லிக் குடுக்கத் தேவையேயில்லை. அப்பிடிப்பட்டவை இப்ப 'உதவி செய்யிறம்' எண்டும் உழைக்கத் தொடங்கி இருக்கினம். முதலில ஒரு நாலைஞ்சுபேர் ஊரில உள்ளவைக்கு சாமான் சக்கட்டு வாங்கிக் குடுத்து அதை உந்த பேஸ்புக்கில போடுவினம். அதைப் பார்த்து வெளிநாட்டில இருக்கிற அவையின்ர சொந்தக்காரர், நண்பர்கள், "இப்பிடி நிறையப் பேருக்கு உதவுங்கோ" எண்டு காசை அனுப்புவினம். அப்பிடி அனுப்பிற காசில இஞ்ச இருக்கிறவை பசியாறுகினம் எண்டும் சொல்லுகினம்.**
**எல்லாரும் அப்பிடியில்லைதான். நிறையப்பேர், நிறைய அமைப்புக்கள் தங்கட கணக்கு வழக்குகளை எல்லாம் வெளிப்படையாய் போட்டு, எந்தவொரு கரும்புள்ளியுமில்லாமல் உதவி செய்துகொண்டு தான் இருக்கினம். ஆனா, ஒருசிலர் உதவி செய்யப் போறம். ஏலுமான காசு அனுப்புங்கோ எண்டு வெளிநாட்டுக்காரரிட்ட வாங்கிப்போட்டு, அதை தங்கட பொக்கற்றுக்கை போடுறதால, உண்மையாய் ஒருசதம்கூட தொடாமல் உதவி செய்யிறவைக்கும் கெட்டபெயர். இப்பிடி உதவி செய்யிறதாய் சொல்லுற ஆக்கள், சீசனுக்கு ஏத்தமாதிரி ஒவ்வொரு முறையும் வேற வேற சாட்டுகளைச் சொல்லி வெளிநாட்டுக்காரரிட்ட காசு கேக்கினமாம்.**
**''கொரோனாவால் சனம் வேலைக்கு போகமுடியாமல் சாப்பாட்டுக்கே கஷ்டப்படுகுது"**
**"வாழ்வாதாரம் இழந்த குடும்பங்களுக்கு தொழில் தொடங்க முதலீடு கொடுத்தால் அவை சுயமாய் உழைப்பினம்."**
**''சனங்கள் சாப்பாடு தண்ணியில்லாமல் வெள்ளத்துக்க தத்தளிக்குதுகள். நீங்கள் ஆதரவு தந்தால் அவையை காப்பாத்தமுடியும்."**
**பள்ளிக்கூடங்கள் தொடங்கிட்டு, கஷ்டப்பட்ட பிள்ளையளுக்கு கொப்பி, புத்தகம், சப்பாத்து வாங்க வேணும். ஏலுமானவைக்கு உதவி செய்யலாமே" இப்பிடி விதவிதமாகத் தூண்டில் போடுகினமாம். இப்ப மேல சொன்ன ஒண்டுமே பொய்யில்லை. உண்மையாகவே சனம் இப்பிடியான கஷ்டங்களை அனுபவிக்குதுதான். ஆனால் அப்பிடியான சனத்துக்கு அனுப்பிற காசுகள் உண்மையாவே பாதிக்கப்பட்ட சனத்துக்கு முழுசாய் கிடைக்குதா? எண்டு கேட்டால் டவுட் தான். இப்பிடி வெளிநாட்டுக்காரர் அனுப்பின காசெல்லாம் சரியான ஆக்களுக்கு குடுபட்டிருந்தால் இப்ப வன்னியில உள்ள எல்லாரும் சுயதொழில் தொடங்கி, சொந்தவீடு கட்டி, எங்கேயோ போயிருப்பினமே. ''இப்பிடி உதவிகள் கொட்டிக் குவிஞ்சாலும் ஏன் இன்னமும் வன்னியில் முக்கால்வாசிப்பேர் வாழுறதுக்கு வழிதெரியாமல் ஏங்கிக் கொண்டிருக்கினம்? அப்ப வாற உதவியள் ஒழுங்காகப் போய்ச் சேரேல்லை எண்டுதானே அர்த்தம்.'' எண்டு வன்னியில இருக்கிற ஒரு சமூக சேவையாளர் சொல்லி ஆதங்கப்படுகிறார்.**
**வெளிநாட்டிலை உள்ளவை ஆருக்கும் உதவி செய்ய நினைச்சால் நேரடியாய் நீங்களே செய்யுங்கோ. இப்பிடி பிச்சை எடுக்கிற பெருமாளிட்டயே தட்டிப்பறிக்கிற அனுமன் மாதிரி ஆக்களிட்ட குடுத்து, வீணாக்காதேயுங்கோ. திரும்பவும் சொல்லுறம், இது உண்மையாய் உதவி செய்யிறவையைப் பற்றிச் சொல்லேலை. உதவி செய்யிறம் எண்டு நடிச்சு, உழைக்கிறவையைப் பற்றித்தான். தொப்பி அளவானவை போட்டுக் கொள்ளட்டுமன்.**



- பட்சி

யாழ். மாநகர சபையின்

# சேதனப் பசளைக்கு அதிகரித்தது கேள்வி

யாழ்ப்பாணம், ஒக். 21
யாழ்ப்பாண மாநகர சபையின் மீள் சுழற்சி மையத்தில் உருவாக்கப்படும் சேதனப்பசளைக்கு கேள்வி அதிகரித்துள்ளது என்று யாழ்ப்பாண மாநகர சபையின் ஆணையாளர் த.ஜெயசீலன் தெரிவித்தார்.
யாழ்ப்பாண மாநகர சபை சேதனப் பசளை உற்பத்தி தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,
அண்மைக்காலமாக சேதனப் பசளைக்கு கேள்வி அதிகமாகக் காணப்படுவதன் காரணமாக சேதனப் பசளை உற்பத்தியை நாம் அதிகரித்துள்ளோம்.
அண்மைய காலங்களில் மாதத்துக்கு 25ஆயிரம் தொடக்கம் 30 ஆயிரம் கிலோகிராம் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுகின்றது. 'வீரியம்' என்ற பெயரில் யாழ்ப்பாண மாநகர சபைக்குச் சொந்தமான மீள்சுழற்சி மையத்தில் சேதனப் பசளை உற்பத்தி செய்யப்பட்டு ஒரு கிலோகிராம் 20 ரூபா என்ற அடிப்படையில் விற்பனை செய்யப்படுகிறது.
தற்போது எமது சேதனப்பசளையை விவசாயிகள் மற்றும் ஏனைய பொதுமக்கள் என பெருந்தொகையானோர் ஆர்வத்துடன் பெற்றுக் கொள்கின்றார்கள். ஆர்வமுள்ளவர்கள் மாநகரசபை மீள் சுழற்சி மையத்தில் உருவாக்கப்படும் சேதனப்பசளையை மீள்சுழற்சி மையத்திலும் மற்றும் ஏனைய திரட்டு அலுவலகங்களிலும் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார். (த-இ).

தாயாருக்குப் பயந்து

# குளத்தில் பாய்ந்த சிறுவன் உயிரிழப்பு

கொழும்பு,ஒக்.21
தாயாருக்குப் பயந்து, மீன் வளர்ப்புக்காக அமைக்கப்பட்டிருந்த குளமொன்றில் பாய்ந்த 7 வயதுடைய சிறுவன் ஒருவன் உயிரிழந்துள்ளான்.
இந்தச் சம்பவம் பிபிலை மெதகம பெல்லன்ஓயாவுக்கு அருகில் இடம்பெற்றுள்ளது.
உயிரிழந்த சிறுவன் தனது சகோதரர்களுடன், பெல்லன்ஓயாவுக்கு நீராடச் சென்றுள்ளான். அங்கு அருகில் அமைக்கப்பட்டிருந்த மீன் வளர்ப்புக்கான குளத்தைப் பார்த்துக் கொண்டிருந்தனர். இதன்போது தாயார் வருவதைக் கண்டு பிள்ளைகள் மூவரும் குளத்துக்குள் பாய்ந்துள்ளனர். அதில் 7 வயதுச் சிறுவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளான். ஏனைய சிறுவர்கள் இருவரும் காப்பாற்றப்பட்டுள்ளனர்.
மெதகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஒ-4)

# அம்பலவன் பொக்கணையில் சட்டவிரோத மணல் அகழ்வு

முல்லைத்தீவு,ஒக்.21
கரைதுறைப்பற்று பிரதேச செயலர் பிரிவுக் குட்பட்ட அம்பலவன் பொக்கணை கிராமத் தில் சட்டவிரோத மணல் அகழ்வு இடம்பெற்று வருகிறது என்று அப் பகுதி மக்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.



அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
அதிகாலை நேரங்களில் கடற்கரைப் பகுதிக்கு அண்மையில் உழவு இயந்திரங்களில் மணல் ஏற்றி அதன் பின்னர் டிப்பர் ரக வாகனங்களில் பரிமாற்றம் செய்யப்பட்டு இராணுவ சோதனை அல்லாத வீதிகளால் கொண்டு செல்லப்படுகின்றன.
இதனை பொலிஸார் கண்டு கொள்ளாமல் உள்ளனர் ஒரு நாளைக்கு சுமார் பத்து லோட் மணல் வெளி மாவட்டத்துக்கு கொண்டு செல்லப்படுகிறது.
மணல் அகழ்வால் இந்தப் பிரதேசம் பெரிய அழிவை நோக்கிச் செல்கின்றது. எதிர்கால சந்ததியினர் குறித்த பிரதேசங்களில் வாழ முடியாத சூழ்நிலை உருவாகும். சுனாமி போன்ற பேரபாதுக்கள் ஏற்படும்போது கடல் அரிப்பால் கிராமங்களுக்குள் கடல் நீர் உட்புகும் அபாயமும் ஏற்படும். எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் விரைந்து களப்பணி மேற்கொண்டு மணல் அகழ்வைத் தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கின்றோம் - என்றனர். (ஐ-13)



# சீரமைக்கப்பட்ட வீதி மீண்டும் கடும் சேதம்

கிளிநொச்சி,ஒக்.21
புதிதாக சீரமைக்கப்பட்ட வீதியொன்று மீண்டும் சேதமடைந்துள்ளது. கண்டாவளை-தருமபுரம் பகுதியிலுள்ள வீதி, கடந்த வருடம் 2 மில்லியன் ரூபா செலவில் புதிதாக புனரமைக்கப்பட்டது.
அதில் சுமார் 200 மீற்றர் வரையான வீதி பாதசாரிகள் கூடப் பயணிக்க முடியாத நிலைமையில் தற்போது உள்ளது.
வீதி வேலைகள் சீரில்லை என்று சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் தெரிவிக்கப்பட்டபோதும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லை. எனவே சீரற்ற வீதியை மீண்டும் புனரமைக்க வேண்டும் என்று மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஒ-4-113)

# ஜெயபுரம் வயல் காணியை முழுமையாக விடுவிக்கவும்

அப்பகுதி மக்கள் கோரிக்கை

கிளிநொச்சி,ஒக்.21
கிளிநொச்சி பூநகரி ஜெயபுரம் கிராமத்தில் உள்ள மிகுதி வயற்காணிகளையும் விடுவிக்க வேண்டும் என்று அப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.
அவர்கள் மேலும் தெரிவிக்கையில்,
1983ஆம் ஆண்டு தென்னிலங்கையில் வன்செயல்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கென ஜெயபுரம் கிராமம் உருவாக்கப்பட்டது. மேட்டுக் காணிகளில் மக்கள் குடியேறி இருந்த போதிலும் தேவன்குளத்தின் கீழ் ஜெயபுரம் கிராம மக்களுக்கு வயற் காணிகள் 550 ஏக்கர் வரை ஒதுக்கப்பட்டிருந்தது. நாட்டில் ஏற்பட்டிருந்த போர்ச்சூழல் காரணமாக இக்காணிகளில் மக்கள் பயிர்ச் செய்கைகளில் ஈடுபட முடிய வில்லை. 2010ஆம் ஆண்டில் இருந்த வயல் காணிகளை வழங்குமாறு மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில் வனவளத் திணைக்க ளத்தின் பிடியில் இருந்து 130 ஏக்கர் வரையான காணி அண்மையில் விடுவிக்கப்பட்டது.
ஆனாலும் குறித்த காணிக்கு வன்னேரிக்குளம் கிராமமக்களும் உரிமை கோருவதன் காரணமாக விடுவிக்கப்பட்ட 130 ஏக்கரில் 30 ஏக்கர் வரையான நிலப்பரப்பில் பயிர்ச் செய்கை மேற்கொள்ளமுடியாத நிலை காணப்படுகிறது.
அரசியல்வாதிகளும் அதிகாரிகளும் ஜெயபுரம் மக்களைத் தொடர்ந்து ஏமாற்றி வருகின்றனர். தேவன்குளத்தின் கீழ் உள்ள வயல் நிலங்கள் முழுமையாக விடுவிக்கப்படவேண்டும். தேவன் குளம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஜெயபுரம் மக்களுக்கு ஒதுக்கப்பட்டிருந்த 550 ஏக்கர் வரையான வயல் காணி வனவளத் திணைக் களத்தின் பிடியில் இருந்து முழுமையாக விடுவிக்கப்பட்டு வயல் நிலங்கள் வழங்கப்பட வேண்டும்.என்றனர். (ஐ-13)

# இந்திய மீனவர்கள் இருவருக்கும் மறியல்

யாழ்ப்பாணம், ஒக். 21
இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட இரண்டு இந்திய மீனவர்களையும் எதிர்வரும் முதலாம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க ஊர்காவற்றுறை நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.
குறித்த இருவரும் இலங்கைக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்துக் கொண்டிருந்த பொழுது இலங்கைக் கடற்படைப் படகுடன் மோதுண்டு இந்திய மீனவர் படகு விபத்துக்குள்ளாகியிருந்தது.
இதன்போது இந்திய மீனவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல்போனநிலையில், நேற்றுச் சடலமாக மீட்கப்பட்டார்.
படகு விபத்துக்குள்ளானதையடுத்து கைதுசெய்யப்பட்ட இரண்டு இந்திய மீனவர்களும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக காரைநகர் கடற்படையினரால் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் நேற்றுமுன்தினம் ஒப்படைக்கப்பட்டனர்.
குறித்த மீனவர்கள் இருவரும் நேற்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சட்ட மருத்துவ அதிகாரியிடம் முற்படுத்தப்பட்டபின்னர் நீதிமன்றில் நிறுத்தப்பட்டனர். அதன்போதே மறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர். (த-25)

# ஒப்பந்தத்துடன் ஓமானிடம் கடன்

கொழும்பு,ஒக்.21
ஒரு சில ஒப்பந்தங்களுடன் 3.6 பில்லியன் டொலர் கடன் ஓமானிடம் இருந்து பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. அதற்கான ஒப்பந்தம் அடுத்த வாரம் கைச்சாத்திடப்படும் என்று எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்துள்ளார்.
5 வருடத்துக்கு ஒருமுறை என்ற அடிப்படையில் 20 வருடங்களுக்குள் மீண்டும் அந்தக் கடனைச் செலுத்தும் வகையில், இந்த ஒப்பந்தம் அமையும்.
உலகளவில் எரிபொருள் விலை கடுமையாக அதிகரித்துள்ள நிலையில், நாட்டுக்குத் தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்காக இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுகின்றது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஒ-4)

## ஆசிரியர்களுக்கு ஊதியம் நிறுத்தம்

# வடமேல் மாகாணத்தின் ஆளுநர் அறிக்கையை திரும்பப் பெறுவார்

### இலங்கை ஆசிரியர் சேவைச் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜெயசிங்க தெரிவிப்பு



**கொழும்பு, ஒக். 21**

**ஒக்ரோபர் 21ஆம் திகதி பணிக்கு வராத ஆசிரியர்களின் நவம்பர் மாதச் சம்பளம் நிறுத்தப்படும் என்று தனது அறிக்கையை வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே திரும்பப் பெறவேண்டிய கட்டாயம் ஏற்படும்.**

இவ்வாறு இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் பொதுச் செயலாளர் மஹிந்த ஜெயசிங்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பளத்தை குறைக்கும் அதிகாரம் மாகாண ஆளுநருக்கு இல்லை. 21ஆம் திகதி பாடசாலைகளைத் திறப்பது குறித்து பல்வேறு அரசியல்வாதிகள் பல்வேறு விதமாகச் சொல்கிறார்கள். வடமேல் மாகாண ஆளுநர் ராஜா கொல்லுரே சொல்வதையும் பார்த்தோம். 21ஆம் திகதி பாட சாலைகளுக்கு வராவிட்டால் நவம்பர் மாதச் சம்பளம் குறைக்கப்படும் என அவரது தரப்பில் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அத்தகைய சாத்தியம் இல்லை. உங்கள் சம்பளத்தை பாதிக்க நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்பதை இந்த நாட்டின் குறிப்பாக வடமேல் மாகாண ஆசிரியர்களுக்கு வலியுறுத்துகிறோம்- என்றார். (ம)

## வீடுகளில் சிகிச்சை பெறுவோர் வீழ்ச்சி

கொழும்பு,ஒக்.21

வீடுகளில் சிகிச்சை பெற்றுவரும் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் வீடுகளில் நோயாளர்களைப் பராமரிக்கும் மருத்துவக்குழுவின் பிரதானி விசேட மருத்துவர் மல்காந்தி கல்ஹேன தெரிவிக்கையில், வீடுகளில் சிகிச்சை பெறும் தொற்றாளர்களின் எண்ணிக்கை 20 முதல் 30 வீதம் வரை வீழ்ச்சி அடைந்துள்ளது. இதற்கு பெரும்பாலானோர் கொரோனாத் தடுப்பூசி பெற்றுள்ளமையே பிரதான காரணம்- என்றார். (ஓ.4)

## தமிழக மீனவர்கள் மீதான அத்துமீறலுக்கு முடிவுகட்டுக

### பா.ம.க நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்து



கொழும்பு, ஒக். 21

தமிழக மீனவர்கள் கைது, தாக்குதல், படகுக் கவிழ்ப்பு என சிங்களக் கடற்படையினரின் தொடரும் அத்துமீறல்களுக்கு முடிவு கட்டப்பட வேண்டும் என பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.

இது தொடர்பாக, ராமதாஸ் நேற்று தனது சமூக வலைத்தளத்தில், 'வங்கக் கடலில் மீன் பிடிக்கச் சென்ற புதுக்கோட்டை மீனவர்களின் படகை சிங்களக் கடற்படைக் கப்பல் மோதிக் கவிழ்த்துள்ளது. அதில், மூன்று மீனவர்கள் கடலில் மூழ்கிவிட்டனர். பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கு நிதியுதவியும், சேதமடைந்த படகுக்கு இழப்பீடும் வழங்க அரசு முன்வர வேண்டும். தமிழக மீனவர்கள் கைது, தாக்குதல், படகுக் கவிழ்ப்பு என சிங்களக் கடற்படையினரின் அத்துமீறிய செயற்பாட்டுக்கு முடிவு கட்டப்பட வேண்டும். சிங்களக் கடற்படையினர் மீது வழக்குப் பதிவுசெய்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் - என்று குறிப்பிட்டுள்ளார் (ம)

## கோத்தாவின் படம் மீது தாக்குதல்



கொழும்பு,ஒக்.21

ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்சவின் உருவப்படம் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. விவசாயத்துக்கான இரசாயன உரங்கள் கோரி, அநுராத புரம் பதவியாப் பகுதியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது ஜனாதிபதியின் உருவப்படம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தென்னிலங்கை ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (ஓ.4)

## முல்லைத்தீவு பொதுமைதானம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும்

முல்லைத்தீவு,ஒக்.21

முல்லைத்தீவு மாவட்டத்தின் பொது மைதானம் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும் என்று கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், முல்லைத்தீவு பொதுமைதானத்தை சீரமைப்பதற்கு நிதி மத்திய அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது என்று அறிகின்றோம். இந்த நிதி மூலம் சகல வளங்களையும் கொண்ட பொதுமைதானம் முல்லைத்தீவில் அமைய வேண்டும். மாவட்டச் செயலகத்துக்கு முன்பாக எமது பிரதேச சபைக்கு அருகில் பொது மைதானத்துக்குரிய காணி உள்ளது. கடந்த பத்தாண்டுகளில் சொல்லும்படியான அபிவிருத்திப் பணிகள் இம்மைதானத்தில் இடம் பெறவில்லை.

மாவட்டத்தில் பொதுமைதானம் சிறந்த முறையில் இருக்குமானால் விளையாட்டு உள்ளிட்ட பல்வேறு நிகழ்வுகளை சிறந்த முறையில் நடத்த முடியும். மாவட்டத்தில் சிறந்த மைதானங்கள் இல்லாத நிலைமை காணப்படுகின்றது. இந்த நிலையில் முல்லைத்தீவு பொது மைதானத்தை அபிவிருத்தி செய்வதன் மூலம் பெரும் நன்மைகள் உருவாகும். இதற்கான நடவடிக்கைகளை உரிய அதிகாரிகள் எடுக்க வேண்டும்-என்றார்.(ஐ-13)

படகு கவிழ்ந்ததில்

## காணாமற்போன மீனவர் சடலமாக மீட்கப்பட்டார்

யாழ்ப்பாணம், ஒக். 21

காரைநகர் கடற்பரப்பில், படகு கவிழ்ந்த விபத்தில் காணாமற்போன இந்திய மீனவர் நேற்றுக் காலை சடலமாக மீட்கப்பட்டார்.

இந்தியாவின் கோட்டைப்பட்டினத்தில் இருந்து நேற்றுமுன்தினம் புறப்பட்ட படகு, எல்லைதாண்டி காரைநகர் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டபோது, இலங்கைக் கடற்படையின் ரோந்துப் படகு மோதியதில் நடுக்கடலில் மூழ்கியது.

படகில் இருந்த மீனவர்கள் இருவர் உயிருடன் மீட்கப்பட்ட நிலையில், ஒருவர் காணாமற்போனார். காணாமற்போன மீனவரை மீட்கும் நடவடிக்கைகள் தீவிரப் படுத்தப்பட்டன. எனினும், அது பயனளிக்கவில்லை. நேற்றுக்காலை அந்த மீனவர் சடலமாக மீட்கப்பட்டார். (ம)

# இழுவைவலை தடைச்சட்டத்தை ஏன் நடைமுறைப்படுத்தவில்லை?

### உருவாக்கியோரிடம் கேட்கிறார் டக்ளஸ்

கொழும்பு, ஒக். 21

இழுவைவலை தடைச்சட்டத்தை உருவாக்கினோம் என்று தெரிவிக்கின்றவர்கள் எதற்காக அதை நடைமுறைப்படுத்தவில்லை என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியக் கடற்றொழிலாளர்களால் மேற்கொள்ளப்படுகின்ற எல்லை தாண்டிய அத்துமீறிய சட்ட விரோத தொழில்முறைக்கு எதிராக 2017ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இழுவை வலை தடைச் சட்டம் பயன்படுத்தப்படாமையினாலேயே இந்தியக் கடற்றொழிலாளர்கள் அதிகளவில் எல்லை தாண்டி வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டப்படுகிறது.

இது தொடர்பில் உங்களின் கருத்து என்ன என்று டக்ளஸிடம் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினார்கள்.

இதற்குப் பதில் வழங்கிய டக்ளஸ் மேலும் தெரிவிக்கையில்,

தம்மால் நல்லாட்சிக் காலத்தில் குறித்த சட்டம் இயற்றப்பட்டதாகத் தெரிவிக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் போன்றவர்கள், தமது ஆட்சிக் காலத்தில் இந்தியக் கடற்றொழிலாளர்களுக்கு எதிராக குறித்த சட்டத்தைப் பிரயோகிக்க வில்லை. 2017ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இழுவை வலைச் சட்டம் உருவாக்கப்பட்ட பின்னர் சுமார் 100க்கும் மேற்பட்ட இந்திய மீன்பிடிப் படகுகள் கைப்பற்றப்பட்ட போதிலும், அவற்றுக்கு எதிராக இழுவை வலைத் தடைச் சட்டம் பயன்படுத்தப்படவில்லை. எனினும், தற்போது குறித்த சட்டங்களின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அண்மையில், தமிழ் அரசுக் கட்சியை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலரும் அவர்களின் ஆதரவாளர்களும் இணைந்து முல்லைத் தீவில் இருந்து பருத்தித்துறை வரை மேற் கொண்ட கடற்பயணம் தொடர்பாக அலட்டிக் கொள்ளவில்லை. அது தோல்வி யில் முடிந்துள்ளது - என்றார். (ம)

# ஆசிரியர்கள் அனைவரும் பணிக்கு திரும்பவேண்டும்

## இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 21

**இன்று 21ஆம் திகதி பாடசாலைகளுக்குச் சென்று பணிகளில் ஈடுபட வேண்டும் என்று அதிபர்கள், ஆசிரியர்களிடம் கோரிக்கையை முன்வைத்துள்ளது இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்.**

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பிவைத்துள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

பாடசாலைப் பிள்ளைகள் பள்ளிக்கல்வியை பல மாதங்களாக இழந்து நிற்கின்றனர். எம்மை நம்பி ஒப்படைக்கப்பட்ட பிள்ளைகளுக்கு ஏதோ ஒரு வகையில் நாம் கல்வியை வழங்கியே ஆக வேண்டும். நாம் தற்போது உள்ள நிலையையும் கருத்திற்கொள்வோம். இதுவரை காலமும் பாடசாலைகள் பூட்டப்பட்டமைக்கு எம்மீது குறைசொல்ல முடியாது.

ஆனால் பாடசாலைகள் தொடங்கிய பின்னர் அவர்கள் ஒட்டுமொத்தமாக இழந்தவற்றை எம் மீது திணிக்கப் பலரும் முயற்சி செய்கின்றனர்.

இதைவிட அரசாங்கம் எமது சேவையை பிறரிடம் கொடுப்பதாக இழிவுபடுத்துகின்றது. எமது தொழிலை இல்லாமல் செய்வதற்கு முயலுகின்றது. அதிபர் பதவியை இன்னொருவரிடம் நிரந்தரமாக வழங்குவதற்கு ஆலோசிக்கின்றது.

சமூகத்தில் உள்ள நன்மதிப்பை இல்லாமல் செய்ய பல மாற்று வழிகளைக் கையாளுகின்றது. ஏன் பெற்றோரைக்கூட எமக்கு எதிராக அணி திரட்டுவதனைப் பார்க்கக்கூடியதாக உள்ளது.

அண்மித்த செய்திகள் அனைத்தும் அதனையே வெளிப்படுத்தி நிற்கின்றன.

ஆகையால் பேரன்புக்கும், பெருமதிப்புக்கும் உரித்தான அதிபர்கள், ஆசிரியத் தோழர்களிடம் வினயத்துடன் நாம் கேட்டுக்கொள்வது என்னவென்றால், சமூகத்தில் எமது தொழிலுக்கும் எமக்கும் உள்ள நன்மதிப்பைக் கெடுத்துவிடாமலும், எமது தொழில் பாதுகாப்பை உறுதிசெய்யும் வகையிலும் நாம் அனைவரும் வரும் 21 ஆம் திகதி பாடசாலைக்குச் சென்று ஆசையோடு ஓடிவருகின்ற குழந்தைகளுக்கு ஆறுதலாக இருப்போம். வருடக்கணக்காக எமது முகங்களைப் பார்ப்பதற்காக பிள்ளைகள் காத்திருக்கின்றனர்.

பெற்றோர் பிள்ளைகளை வீடுகளில் வைத்திருந்து பல அசௌகரியங்களை சுமந்துள்ளனர். பெற்றோராகிய நீங்கள் உங்கள் குழந்தைகளை வரும் 21ஆம் திகதி நம்பிக்கையோடு பாடசாலைகளுக்கு அனுப்புங்கள்- என்றுள்ளது. (ம)



# புலம்பெயர்ந்தவரின் நிதியில் மரக்கன்றுகள்

யாழ்ப்பாணம், ஒக். 21

யாழ்ப்பாணத்தின் சிலபகுதிகளில் வாழும் குடும்பங்களுக்கு நல்லின மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

பொன்மணி அறக்கட்டளை ஸ்தாபகர் குமாரசிங்கம் முத்துக்குமாரின் ஏற்பாட்டால், புலம்பெயர் நாட்டில் வசிக்கும் யாழ். மத்திய கல்லூரியின் பழைய மாணவர் மகேந்திரராஜாவின் நிதியில் இந்த மரக்கன்றுகள் வழங்கப்பட்டன.

மேலும், பொன்மணி அறக்கட்டளை ஊடாக பல்வேறு விதமான உதவித்திட்டங்களை இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் மலையகத்திலும் அவர் வழங்கியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஒ,ரி1 27)



# தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் மருத்துவர்களுக்கான விடுதிக்கு அடிக்கல்

தெல்லிப்பழை,ஒக்.21

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் மருத்துவர்களுக்கான விடுதி அமைப்பதற்கான அடிக்கல் நடும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது.

80 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டின் அடிப்படையில் அமைக்கப்படவுள்ள கட்டடத்துக்கான அடிக்கல் நடும் விழாவில் முதன்மை விருந்தினராக மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவ கலாநிதி ஆ. கேதீஸ்வரன் கலந்துகொண்டார்.

மேலும் நிகழ்வில் தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையின் மருத்துவ அத்தியட்சகர் ப. திலீபன், சுகாதார அமைச்சின் பணிப்பாளர் (கட்டடங்கள்) ரஜுவன், வலி.வடக்கு பிரதேச சபை தவிசாளர் சுகிர்தன்,காணி உரிமையாளர், காணியை வாங்குவதற்கு உதவி வழங்கிய வர்த்தகர்கள் மற்றும் தாதிய பரிபாலகர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் கருத்துத் தெரிவிக்கையில்,

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் மருத்துவர்களுக்கான இடவசதி பற்றாக்குறை நீண்டகாலமாக காணப்பட்டது. அதைத் தீர்த்து வைப்பதற்காக இந்த வருடம் மாகாணத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதி மூலம் மருத்துவர்களுக்கான விடுதி அமைக்கப்படவுள்ளது.

இந்த விடுதியின் அபிவிருத்திப் பணிகள் இரண்டு கட்டங்களாக இடம்பெறும். இந்தக் கட்டத்தை அமைப்பதற்கு 80 மில்லியன் ரூபா தேவைப்படும். இந்த வருடம் ஆரம்பமாகும் கட்டடப் பணி அடுத்த வருடஇறுதிக்குள் நிறைவடையும்.

அடுத்த வருட இறுதிப் பகுதிக்குள் விடுதியின் அரைவாசிப் பகுதியை நாம் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும்.

அதன்பின்னர் இரண்டாவது கட்டப்பணி ஆரம்பமாகி முழுமையாக மருத்துவர்கள் தங்கும் விடுதி அமைக்கப் பெற்றுவிடும் - என்றார். (ஐ-125)

# பாரம்பரிய போட்டிகள்

கொடிகாமம், ஒக்.21

நாவற்குழி மேற்கு செல்வநகர் கிராமத்தில் இயங்கி வரும் உதயதாரகை சிறுவர் கழகத்தால் நவராத்திரி விழாவை முன்னிட்டு சிறுவர்களிடையே தமிழர்களின் பண்பாட்டை மேம்படுத்த பாரம்பரியபோட்டி நிகழ்வுகள் இடம்பெற்றன.

**கோலம் போடுதல், தோரணம் கட்டுதல், மாலை கட்டுதல் போன்ற போட்டிகளும் , சித்திரப் போட்டி தேவாரப் போட்டி மற்றும் பேச்சுப் போட்டி என்பனவும் நிகழ்த்தப்பட்டன.** (ச-159)

இந்தியாவிடம் கடன்பெற

# 13ஆவது திருத்தம் நிபந்தனையல்ல!

கொழும்பு, ஒக். 21

அரசமைப்பின் 13 வது திருத்தம், இந்தியாவிலிருந்து கடன் பெறுவதற்கான முன்நிபந்தனை அல்ல என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் வாங்குவதற்காக கடன் பெற இந்தியாவுடன் பேச்சு நடந்து கொண்டிருப்பதாக அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார்.

இருப்பினும், இந்த விடயத்துக்கு அரசமைப்பின் 13ஆவது திருத்தம் ஒரு முன் நிபந்த்னையாக வைக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

அரசமைப்பின் 13ஆவது திருத்தத்தை முழுமையாக செயற்படுத்த இலங்கை அரசாங்கத்திடம் இந்தியா தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்ற நிலையில் அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

**கடுமையான அந்நியச் செலாவணி நெருக்கடிக்கு மத்தியில் இலங்கை அரசாங்கம் எரிபொருள் கொள்வனவுக்காக 500 மில்லியன் அமெரிக்க டொலர் கடனை இந்தியாவிடம் கோரியுள்ளது.**

நாட்டில் தற்போது உள்ள எரிபொருள் அடுத்த ஜனவரி வரை மட்டுமே போதுமானதாக உள்ளது என அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்திருந்ததையடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (து-இ)

# உத்தேச புதிய அரசமைப்பு விரைவில் ஜனாதிபதியிடம்

கொழும்பு, ஒக். 21

புதிய அரசமைப்புக்கான வரைவு நகல், ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்சவிடம் விரைவில் கையளிக்கப்படும் என்று நீதி அமைச்சர், ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்; "புதிய அரசமைப்பை இயற்றும் பணி தற்போது இறுதிக்கட்டத்தில் உள்ளது.

இதற்காக நியமிக்கப்பட்ட நிபுணர்குழுவானது, புதிய அரசமைப்புக்கான வரைவு நகலை விரைவில் ஜனாதிபதியிடம் கையளிக்கவுள்ளது.

அதன்பின்னர் பல்லினத்தன்மையை உறுதிப்படுத்தக்கூடிய புதிய அரசமைப்பை இயற்றுவதற்கான வாய்ப்பு எமக்கு உருவாகும். மாகாணசபைத் தேர்தல் தொடர்பில் தற்போது கலந்துரையாடல்கள் இடம்பெற்றுவருகின்றன.

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவொன்றும் உள்ளது. சகல தரப்பினரினதும் கருத்துக்களை உள்வாங்கிய பின்னரே மாகாணசபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் அரச தலைமை முடிவெடுக்கும்" - என்றார். (து-44)

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## வடக்கும் வன்முறை சூழ் வாழ்வும்


தன் அதிகாரத்துக்கு உட்பட்ட வகையில், வடமாகாண மக்களின் உடனடித் தேவைகளை நிறைவேற்றத் தயார் என்று தெரிவித்துள்ள வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா, வடக்கு மக்களின் உடனடித் தேவைகளை எழுத்துமூலம் தன்னிடம் ஒப்படைக்குமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான இரா.சம்பந்தனிடம் கோரிக்கையும் விடுத்துள்ளார். வடமாகாணத்தின் ஆளுநர் என்ற ரீதியில், இங்குள்ள மக்களின் பிரச்சினைகளைத் தீர்த்துவைக்க வேண்டும் என்று அவரிடம் உள்ள முனைப்புக்காக அவரைப் பாராட்டவேண்டும்.

அதேநேரம் புதிய ஆளுநர் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். வடமாகாணத்தின் ஆளுநர்களாக இதற்கு முன்னர் இருந்தவர்கள் மக்கள் மனங்களில் இடம் பிடித்துள்ளனரா அல்லது திருப்தியான சேவையை வழங்கிச் சென்றுள்ளனரா என்றால் அதற்குரிய பதில் சங்கடங்கள் நிறைந்தனவாகவே அமையும். அதில் இரண்டாவது பேச்சுக்கு இடமில்லை. இந்த நிலைக்குப் பல காரணங்கள் இருக்கலாம். ஆனால், அவற்றுக்கு எல்லாம் முதன்மைக் காரணம் 'தமிழர் தளச் சிந்தனை' இதற்கு முன்னர் இருந்த ஆளுநர்களிடம் இருக்கவில்லை என்பதுதான். மாறாக அரசாங்கத்துக்கு சார்பான அரசியல் வேலைகளில்தான் அவர்கள் அதிகம் ஈடுபட்டார்கள்.

உதாரணமாக முன்னைய ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ் ஊடகமொன்றுக்கு வழங்கிய நேர்காணலில், 'அதிகாரப் பரவலாக்கம் தமிழர்களுக்குத் தேவையில்லை', 'வடக்கு இளைஞர்கள் தொழிலற்று இருப்பதற்கு முக்கிய காரணம் அவர்களிடம் போதிய கல்வித் தகைமை இல்லை', 'தமிழர்கள் தாயகத்தில் தேசியக் கட்சிகளின் ஊடுருவல் நல்ல சகுனம்' என்றெல்லாம் தெரிவித்திருந்தார். கல்வித் தகைமை இல்லை என்பதால் தொழில் இல்லை என்று சொல்வதற்கு ஆளுநர் தேவையில்லையே. எது தேவையோ அதை ஏற்படுத்தி – நிறைவேற்றிக் கொடுப்பதுதானே ஆளுநரின் செயற்பாடு.

ஆளுநர் என்பவர் ஜனாதிபதியால் நியமிக்கப்படுபவர். எனவே, அரசாங்கத்தின் சட்டதிட்டங்களை நிறைவேற்றுகின்ற, பாதுகாக்கின்ற பொறுப்பு அவருக்கு இருக்கின்றது. ஆனால், தனிப்பட்ட அரசியலை நிறைவேற்ற வேண்டிய தேவையோ, அல்லது ஒரு கட்சியின் பிரதிநிதியாகச் செயற்பட வேண்டிய கட்டாயமோ ஆளுநருக்கு இல்லை. இந்த விடயத்தில்தான் இதுகாலும் பல பிரச்சினைகள் இங்கு நடந்து முடிந்திருக்கின்றன. ஆதலால், அரசின் பிரதிநிதியாகச் செயற்படப்போகும் ஆளுநர் ஜீவன் தியாகராஜா, முன்னைய ஆளுநர்களைப் போல, அரசியல் ரீதியான ஆதாயத்தோடு செயற்படாமல், தமிழர்களின் பிரச்சினைகளை – விவகாரங்களை தமிழர்களின் தளத்திலேயே இருந்து சிந்திக்க – அணுக வேண்டும் என்பதுதான் தமிழர்களின் பெருவிருப்பம்.

இப்போது வடக்கு மக்களுக்கு முன்னுள்ள முதன்மையான தேவை நிம்மதியான வாழ்வே. போர் முடிந்த பின்னர் வடக்கில் முன்னெப்போதும் இல்லாதளவுக்கு மக்களின் வாழ்வியல் கோலம் மாறிவிட்டது. எங்கு பார்த்தாலும் வாள்வெட்டு, போதைப்பொருள் பாவனை,கடத்தல், கொலை, கொள்ளை, பாலியல் வன்புணர்வு, துர்நடத்தை என்று பெரும் வதைமுகாமுக்குள்தான் இன்று வடமாகாண மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இவற்றையெல்லாம் கட்டுப்படுத்த வேண்டிய பொலிஸார், அதனைச் செய்யாமல் வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதால், வன்முறை சூழ்ந்த வாழ்வுக்குள்ளேயே வடக்கு முடங்கவேண்டியிருக்கிறது. எனவே ஆளுநர் முதல் பணியாக வடக்கில் சட்டம் ஒழுங்கு பக்கச் சார்பின்றி நிலைநாட்டப்படுவதை உறுதி செய்யவேண்டும். அதனூடாக வாள்வெட்டு, வன்புணர்வு, கொலை, கொள்ளை, கடத்தல், போதைப்பொருள் என்பவற்றுக்கும் முடிவு கட்ட வேண்டும். இதுவே வடக்கு மக்களின் எதிர்பார்ப்பு. நிறைவேற்றுவாரா ஆளுநர்?.




# நவம்பர் மாதம் 21ஆம்திகதி தமிழ்த் தேசியக்கொடி நாள்

கொழும்பு, ஒக். 21

**நவம்பர் மாதம் 21ஆம் திகதியை தமிழ்த் தேசியக் கொடி நாளாக பிரகடனப்படுத்த நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.**

விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கு என்று உருவாக்கப்பட்டுப் பயன்படுத்தப்பட்டு வந்த கொடியில் இருந்த எழுத்துக்கள் நீக்கப்பட்டு, தமிழீழத்தின் தேசியக்கொடியாக 1990ஆம் ஆண்டு தமிழீழத் தேசியத் தலைவரால் மேற்படி கொடி அறிமுகப்படுத்தப்பட்டது. இந்த நிலையில் மாவீரர் வாரத்தின் முதலாவது நாளை (தொடக்க நாளை) தமிழ்த் தேசியக் கொடி நாளாக அறிவிக்க நாடுகடந்த தமிழீழ அரசு முடிவெடுத்துள்ளது. இது தொடர்பாக முடிவெடுப்பதற்காக எதிர்வரும் 24ஆம் திகதி நாடு கடந்த தமிழீழ அரசின் சிறப்பு அமர்வு இடம் பெறவுள்ளது. (ம)

# தொற்றுப் பரவல் அதிகரிக்குமா? மக்களின் கைகளில்தான் முடிவு

## இராணுவத் தளபதி கருத்து



கொழும்பு, ஒக். 21

"நாட்டில் பொதுமக்களின் செயற்பாடுகளை அடிப்படையாகக்கொண்டே கொரோனா பரவல் அதிகரிக்குமா? இல்லையா? என்பது தீர்மானிக்கப்படும் - இவ்வாறு இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"நீண்ட நாள்கள் விடுமுறையின்போது, சிலர் பயணக்கட்டுப்பாட்டையும் கருத்திற் கொள்ளாமல் மாகாணங்களுக்கு இடையில் பயணித்துள்ளனர். பொறுப்பற்ற விதமான செயற்பாடுகள் அண்மைக்காலமாக அவதானிக்கப்படுகின்றன. இவ்வாறான செயற்பாடுகளால் கொரோனா பரவல் மேலும் அதிகரிக்கும் - என்றார். (ம-22)

# கோத்தாவுக்கு பக்கப்பாட்டு பாடுகிறார் மைத்திரிபால

கொழும்பு, ஒக். 21

யுகதனவி மின் உற்பத்தி நிலைய விவகாரம் தொடர்பில் பேச்சு நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்குமாறு பங்காளிக்கட்சிகளால் விடுக்கப்பட்ட அழைப்பை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நிராகரிக்கவில்லை என்று சுதந்திரக்கட்சியின் தலைவரும், முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

யுகதனவி மின் உற்பத்தி நிலையத்தின் பங்குகளை வெளிநாட்டு நிறுவனத்துக்கு வழங்குவதற்கு சுதந்திரக்கட்சி உட்பட மொட்டு அரசுக்கு ஆதரவு வழங்கும் 11 பங்காளிக்கட்சிகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன.

இது தொடர்பில் பிரதமர் மற்றும் நிதி அமைச்சருடனும் பங்காளிக்கட்சித் தலைவர்கள் சந்திப்பு நடத்தியிருந்தனர். அதேபோல ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடுவதற்காக கடிதமொன்றையும் அனுப்பியிருந்தனர்.

அந்தக் கடிதத்துக்கு பதிலளித்துள்ள ஜனாதிபதி, இவ்விவகாரம் தொடர்பில் பிரதமர், நிதி அமைச்சர் மற்றும் ஆளுங்கட்சி நாடாளுமன்றக்குழுக் கூட்டங்களில் கலந்துரையாடுமாறு பங்காளிகளுக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

இது தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே, பங்காளிகளின் அழைப்பை ஜனாதிபதி நிராகரிக்கவில்லை எனவும், பேச்சு நடத்த வேண்டிய தரப்புகளின் பெயர்களை சுட்டிக்காட்டியிருந்தார் எனவும் மைத்திரிபால சிறிசேன குறிப்பிட்டார். (ஒ-44)



# இன்றைய நாள்

**மேடம்:** உடன்பிறந்தவர்களின் உதவி கிடைக்கும். மகிழ்ச்சி அதிகரிக்கும். உங்களின் செல்வாக்கு உயரும். கருணை காரணமாக உதவி செய்வீர்கள். வெளி நாட்டிலிருந்து எதிர்பார்த்த நல்ல செய்தி வந்து சேரும்.

**இடபம்:** குழந்தைகள் செய்யும் செயலால் பெருமிதம் அதிகரிக்கும். பெற்றோரும், உடன்பிறப்புகளும் உங்களுடன் பிரிய மாக இருப்பர். கணவன் மனைவிக்குள் அன்பும், பாசமும் அதிகரிக்கும்.

**மிதுனம்:** ஆரோக்கியத்தைக் கெடுக்கும் பழக்கங்களை விலக்குங்கள். பணிபுரியும் இடத்தில் நீங்கள் எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். சந்தோஷ வாய்ப்புகள் வந்துசேரும். பதவி உயரும்.

**கடகம்:** நண்பர்களின் மூலம் நிம்மதி கிடைக்கும். திருமண பாக்கியம் உண்டு. வெற்றி ஏற்பட்டு பெருமை சேரும்நாள். வாய்ப்பு ஒன்று தட்டிப்போக லாம். மனதில் திருப்தி நிலவும். நேர்மை யானவர்களின் நட்புக் கிடைக்கும்.

**சிம்மம்:** ஒரே நாளில் முக்கியமான வேலைகளை பார்க்க வேண்டி வரும். உற வினர்கள் நண்பர்களால் செலவினங்கள் அதிகரிக்கும். வியாபாரத்தில் ஒப்பந் தங்கள் தள்ளிப் போகும்.

**கன்னி:** குடும்பத்தில் இருந்த கோபம் யாவும் நீங்கி மகிழ்ச்சி அதிகரிக்கும். அரைகுறையாக நின்ற வேலைகள் எல்லாம் இனிதே முடியும். வியாபா ரத்தில் புதிய முயற்சிகள் பலிதமாகும்.

**துலாம்:** தைரியமாக சில முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள். உடன் பிறந்த வர்கள் நன்மை செய்வார்கள். வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடந்தேறும். அரசால் அனுகூலம் உண்டு.

**விருச்சிகம்:** புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். பிள்ளைகளின் வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறை வேறும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர்கள்.

**தனுசு:** மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். முக்கிய முடிவுகளை தவிர்ப்பது நல்லது. நன்றி மறந்த சிலரை நினைத்து வருந்துவீர்கள். கனிவாகப் பழகுங்கள்.

**மகரம்:** பழைய பிரச்சினைகளுக்கு எளிதாக தீர்வு காண்பீர்கள். உறவி னர்கள் வீடு தேடி வருவார்கள். புண் ணிய ஸ்தலங்கள் சென்று வருவீர்கள். வியாபாரத்தில் திடீர் லாபம் உண்டு.

**கும்பம்:** கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள். உறவினர் நண் பர்களால் நன்மை உண்டு. உங்களால் மற்றவர்கள் ஆதாயமடைவார்கள்.

**மீனம்:** எதையும் சாதிக்கும் தன்னம் பிக்கை வரும். பெற்றோரின் ஆதரவு பெருகும். நம்பிக்கைக்குரியவரை கலந்தா லோசித்து சில முடிவுகள் எடுப்பீர்கள். புது பொறுப்புகளை ஏற்பீர்கள்.




# குஷிநகரில் 100 பிக்குகளுடன் இலங்கை விமானம் தரையிறக்கம்

## பிரதமர் மோடி கலந்துகொண்டு திறந்துவைத்தார்

**புதுடில்லி, ஒக்.21**

**இந்தியாவின் 29ஆவது சர்வதேச விமான நிலையமான குஷி நகரில் அமைக்கப்பட்ட சர்வதேச விமான நிலையம் நேற்று புதன்கிழமை பிரதமர் நரேந்திரமோடியால் திறந்து வைக்கப்பட்டுள்ளது.**

இந்தத் திறப்பு விழாவில் முதல் விமானமாக இலங்கை விமானம் தரையிறங்கியுள்ளது. இதில் இலங்கை இளைஞர் விவகார மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ச உள் ளிட்ட அரச பிரதிநிதிகள் மற்றும் 100 பௌத்த பிக்குகள் பயணித் துள்ளனர்.

இதைத்தொடர்ந்து, மகாபரிநிர் வாண கோயிலுக்குச் சென்ற பிரத மர், அங்கு சாய்ந்த நிலையில் உள்ள புத்தபிரான் சிலைக்கு அர்ச்சனை செய்து வழிபட்டதுடன் போதி மரக்கன்றையும் நட்டுவைத் தார். இந்த விமான நிலையம் 260 கோடி ரூபா மதிப்பில் கட்டப்பட்டுள் ளது. புத்தபிரான் மகா பரிநிர்வாணம் அடைந்ததாக கூறப்படும் வரலாற்று சிறப்புமிக்க தலத்தைத் தரிசிக்க உள்நாட்டு மற்றும் சர்வதேச யாத்தி ரிகர்களுக்கு குஷிநகர் விமான நிலையம் வசதியாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ச)

## உத்தராகண்ட்டில் மழை; பலி 47 ஆக உயர்வு

உத்தராகண்ட் மாநிலத்தில் பெய்து வரும் கன மழை யால் பலியானவர்களின் எண்ணிக்கை 47 ஆக உயர்ந்துள்ளது. அங்குள்ள குமா யோன் பகுதியில் பல வீடுகள் மழை காரண மாக இடிந்து சேதமடைந்துள்ளன. கடந்த செவ்வாயன்று 42 பேர் உயிரிழந்துள்ள நிலை யில் தற்போது பலி எண் ணிக்கை 47ஆக உயர்ந் துள்ளது. இந்த நிலையில் உத்தராகண்ட் முதல்வர் புஷ் கர் சிங் தாமி வெள்ளத்தால் சேதமடைந்த பகுதிகளை பார்வையிட்டுள்ளார். (ச)


**வலிகாமம் வடக்கு பிரதேச சபை**
**காங்கேசன்துறை**

**பகிரங்க ஏல விற்பனை**

வலிகாமம் வடக்கு பிரதேச சபையின் பாவனையிலிருந்து நீக்கப்பட்ட பொருட்கள் ஏல விற்பனை மூலம் விற்பனை செய்யப்படவுள்ளது. இப்பொருட்களை அலுவலக நேரங்களில் காலை 09.00 மணி தொடக்கம் மாலை 03.00 மணிவரை மட்டுமே பார்வையிட முடியும்.

**இடம் : தலைமை அலுவலகம், வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை. (கொல்லங்கலட்டி)**
**காலம் : 02.11.2021 (செவ்வாய்க்கிழமை)**
**நேரம் : காலை 10.30**

**குறிப்பு** : ஏல விற்பனையில் பங்கு பற்றும் ஏலதாரர் மீளளிக்க கூடியதான பிணைப் பணம் ரூபா. 1000.00 செலுத்தப்பட வேண்டும்.

**சோ.சுகிர்தன்**
**தவிசாளர்.**
**வலி.வடக்கு பிரதேச சபை,**
**காங்கேசன்துறை**

**21.10.2021**



உ

**திருமண அழைப்பு**

அன்புடையீர்,

நிகழும் மங்களகரமான பிலவ வருஷம் ஐப்பசி மாதம் 04ம் நாள் (21.10.2021) வியாழக்கிழமை முற்பகல் 09.22 மணி முதல் 11.22 மணி வரையுள்ள அச்சுவினி நட்சத்திரமும், அமிர்தசித்த யோகமும் கூடிய சுபமுகூர்த்த சுபவேளையில்

திரு.திருமதி தர்மராசா மல்லிகாதேவி தம்பதியரின் செல்வப் புதல்வன், திருநிறைச் செல்வன்
**ரதீஸ்வரன்**
அவர்களுக்கும்



திரு.திருமதி பாலசுந்தரம் கமலாதேவி தம்பதியரின் செல்வப் புதல்வி, திருநிறைச் செல்வி
**கௌசியா**
அவர்களுக்கும்

இறைவன் திருவருள் துணைகொண்டு **"தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்தில்"** திருமாங்கல்யதாரணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதித்து தொடர்ந்து மணமகள் இல்லத்தில் நடைபெறும் விருந்துபசாரத்திலும் கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை இனிதே விரும்பும்

**திரு.திருமதி தர்மராசா மல்லிகாதேவி குடும்பத்தினர்**
வாமஸ் வீதி, கோண்டாவில்.
T.P : 077 100 2496




**திரு.திருமதி பாலசுந்தரம் கமலாதேவி குடும்பத்தினர்**
சென் செபஸ்தியார் வீதி, கோண்டாவில்.
T.P : 077 899 9902

(இருவீட்டார் அழைப்பு

# நனோ நைட்ரஜன் உரம் இலங்கையை வந்தடைவு

கொழும்பு,ஒக்.21

**நெல் உள்ளிட்ட சகல பயிர்ச்செய்கைகளுக்கும் பயன்படுத்தக்கூடிய 'நனோ நைட்ரஜன்' திரவ உரம், இந்தியாவில் இருந்து நேற்று அதிகாலை இலங்கையை வந்தடைந்துள்ளது.**



சுமார் 9 லட்சம் ஹெக்ரேயர் விவசாய நிலப்பரப்புக்குத் தேவையான திரவ உரமே இறக்குமதி செய்யப்படவுள்ளது.

இதன் முதலாவது தொகுதியாக ஒரு லட்சம் லீற்றர் 'நனோ நைட்ரஜன்' திரவ உரத்தை ஏற்றிய விமானம் கட்டுநாயக்காவில் தரையிறங்கியுள்ளது.

இதனை கமநல சேவை மையங்களினூடாக, விவசாயிகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது. (ஒ-4)

## தாக்குதலில் இருவர் காயம்

சாவகச்சேரி,ஒக்.21

பாலாவி வடக்கில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற தாக்குதல் சம்பவத்தில் குடும்பப் பெண் உள்ளிட்ட இருவர் காயமடைந்தனர்.

தனிப்பட்ட தகராறு காரணமாக ஏற்பட்ட வாக்குவாதம் கைகலப்பாக மாறியதில் இந்தத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது.

பாலாவி வடக்கைச் சேர்ந்த குடும்பப் பெண்ணும், கெற்பேலி கிழக்கைச் சேர்ந்த 61 வயது முதியவருமே இவ்வாறு காயமடைந்தனர். (ஐ -9)

## மீசாலையில் விபத்து இளைஞர் காயம்

சாவகச்சேரி,ஒக்.21

வேகக் கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் வீதியில் நடந்து சென்ற இளைஞரை மோதிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை மீசாலைப் பகுதியில் இடம்பெற்றது.

விபத்தில் காயமடைந்த மீசாலை கிழக்கைச் சேர்ந்த 28 வயதுடைய இளைஞர் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஐ-9)

### வடமாகாணத்தின்

# 5 மாவட்டச் செயலகங்களிலும் 2 ஒருங்கிணைப்பு அலுவலர்கள்

### ஆளுநர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 21

வடக்கு மாகாணத்தின் 5 மாவட்டச் செயலகங்களிலும் தலா இரண்டு ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கு வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதற்காக 5 மாவட்ட செயலகங்களில் இருந்தும் தலா இரண்டு உத்தியோகத்தர்களின் பெயர் விவரங்கள் ஆளுநரின் செயலகத்துக்கு அனுப்பப்பட்டுள்ளன. மாகாணத்தில் ஒவ்வொரு மாவட்டதிலும் காணப்படும் துறைசார் பிரச்சினைகளை ஆராய்ந்து அறிக்கையிடுவதற்காக



இவர்கள் நியமிக்கப்படவுள்ளனர் என்று அறியமுடிகின்றது. (ம)



# வடக்கு மாகாண சுற்றுலா வழிகாட்டிகள் சங்கம் உதயம்

யாழ்ப்பாணம்,ஒக்.21

வடக்கு மாகாணத்துக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளை முறையாக வழிப்படுத்தும் நோக்குடன், வடக்கு மாகாண சுற்றுலா வழிகாட்டிகள் சங்கம் யாழ்ப்பாணத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

போர் நிறைவடைந்த பின்னர் வடக்கில் சுற்றுலா சார் அபிவிருத்தி நடவடிக்கைகளை மேம்படுத்த, வடமாகாண சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை நிறுவப்பட்டிருந்தது.

இந்த நிலையில் வடக்குக்கு வரும் சுற்றுலாப் பயணிகளுக்கு பிரதேச ரீதியான அறிவை சரியான வகையில் வழங்கவும், சுற்றுலாப் பயணிகளை முறையாக வழிப்படுத்தவும் மூன்று சுற்றுலா வழிகாட்டிகள் அணியினர் தெரிவு செய்யப்பட்டனர்.

அதற்கமைவாக வடக்கு மாகாணத்தின் சுற்றுலா வழிகாட்டிகளுக்கு ஒரு அமைப்பை உருவாக்க வேண்டும் என்ற நோக்கில், வடக்கு மாகாண சுற்றுலா வழிகாட்டிகள் சங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

வடக்கின் சுற்றுலா வழிகாட்டிகள் சங்க நிர்வாகத்தில் பெருந்தலைவராக பேராசிரியர் புஸ்பரட்ணம், அமைப்பாளராக கலைச்செல்வன், போசகராக வட மாகாண சுற்றுலாப் பணியகத்தின் பணிப்பாளர், ஆலோசகர்கள் மற்றும் வடக்கின் மாவட்டச் செயலர்கள் உட்பட வடமாகாண ஹொட்டல் சங்கத்தின் பிரதிநிதி ஒருவரும் உள்ளடக்கப்படுவர்.

தொடர்ந்து நிர்வாகத் தெரிவில் செயலாளராக கிருஷ்ணா, பொருளாளராக ஆத்மன், உப தலைவராக டயனா, உப செயலாளர் நயனீசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்தோடு நூல் வெளியீட்டு வடிவமைப்பாளர்களாக தனுசன், லின்ரன் ஆகிய இருவரும், இணைப்பாளராக கோபாலன், சமூக ஊடகப் பிரிவுக்கு பிரியதர்சன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (ஒ-4-125)

# புலம்பெயர்ந்தவர்களும் ராஜபக்ச அரசுக்கு எதிர்ப்பு

### ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டு

கொழும்பு,ஒக்.21

புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்களும், ராஜபக்ச அரசுக்கு எதிராக போராட்டங்களை ஆரம்பித்துள்ளனர்என்று ஐக்கிய மக்கள் சக்தி சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன தெரிவிக்கையில்:

2019 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலின் போது கோத்தாபய ராஜபக்சவுக்கு வாக்களிப்பதற்காக வெளிநாடுகளிலிருந்து வருகை தந்த பெருமளவான இலங்கையர்கள், தமது எதிர்பார்ப்புக்கள் பூர்த்தி செய்யப்படவில்லை என்பதைத் தற்போது புரிந்து கொண்டுள்ளனர்.

அதன் விளைவாக வெளிநாடுகளில் வசிக்கும் இலங்கையர்கள் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு எதிராகப் போராட்டங்களில் ஈடுபடுவதை அவதானிக்க முடிகின்றது.

ஒவ்வொருவருக்கும் சுயமரியாதையும், சமத்துவமான சூழலில் வாழ்வதற்கான உரிமையும் இருக்கின்றது. எனவே இலங்கையில் பிறக்கும் ஒவ்வொரு பிரஜையும் 'இது எனது நாடு' என்று உணரக்கூடிய வகையிலான, அது குறித்துப் பெருமை கொள்ளக் கூடியவாறாக நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டியது அவசியமாகும்.

அதேவேளை உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத் தாக்குதல்களின் பின்னணியிலுள்ள பிரதான சூத்திரதாரி யார்? என்ற உண்மையைத் தெரிந்து கொள்வது அவசியமாகும். இந்தக் கருத்தை வெளியிட்டமைக்காகக் கடந்த காலத்தில் என்னையும் குற்றப்புலனாய்வுப் பிரிவுக்கு அழைத்து விசாரணை செய்தனர். இந்தத் தாக்குதல்கள் தொடர்பில் கடந்த அரசு பொறுப்புக்கூற வேண்டிய நிலையிலிருக்கின்றது.

ஏனெனில் தாக்குதல்கள் இடம்பெறுவதை முன்கூட்டியே தடுத்து நிறுத்தக்கூடிய வாய்ப்புக் காணப்பட்ட போதிலும், அரசு அதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுக்காமை தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டும்.

எனவே உயிர்த்த ஞாயிறு தினப் பயங்கரவாதத்தாக்குதல்கள் திட்டமிட்டு நடத்தப்பட்டதா? என்பது குறித்து உரியவாறு விசாரணைகளை முன்னெடுப்பது அவசியமாகும்.

இருப்பினும் அதற்கான எந்தவொரு நடவடிக்கைகளும் தற்போதைய அரசால் மேற்கொள்ளப்படவில்லை - என்றார். (ஒ-4)



# போரால் பாதிக்கப்பட்டோருக்கு இழப்பீட்டு காசோலை வழங்கல்

வவுனியா,ஒக்.21

வவுனியா மாவட்டத்தில் போரின்போது இன்னல்களை எதிர்கொண்ட குடும்பங்களுக்கு இழப்பீட்டுக் காசோலைகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வவுனியா பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது.

வவுனியா பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதியில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் கு.திலீபனால் காசோலைகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் வேண்டுகோளுக்கு பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் நிதி ஒதுக்கீட்டில் 18 கோயில்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபாவும் 2 கோயில்களுக்கு தலா 2 லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினரும் வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான கு.திலீபன், வவுனியா பிரதேச செயலாளர் கமலதாசன் மற்றும் அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர். (ச-110)

# சுதந்திரக் கட்சிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

## கோருகிறார் மொட்டுக் கட்சி எம்.பி.



**கொழும்பு, ஒக். 21**


**அரசின் வேலைத்திட்டங்களை குழப்புவதற்கு முற்படும் சுதந்திரக்கட்சிக்கு எதிராக உடனடியாக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்குமாறு எமது கட்சித் தலைமைகளிடம் கேட்டுக்கொள்கின்றேன் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி வலியுறுத்தினார்.**

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவி யலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு வலியுறுத்தினார். இது தொடர்பில் மேலும் கூறியவை வருமாறு,

உரப்பிரச்சினையால் அரசு கவிழும் என எதிரணி நினைத்துக்கொண்டிருக்கின்றது. அதற்கு துணைபோகும் வகையிலேயே சுதந்திரக்கட்சி செயற்படுகின்றது. குறிப்பாக அன்று இரசாயன உரத்துக்கு எதிராக நின்ற மைத்திரிபால சிறிசேன, இன்று மாறுபட்ட நிலைப்பாட்டில் உள்ளார். மாகாணசபைத் தேர்தல் நெருங்குவதால், மகனை முதலமைச்சர் ஆக்கும் நோக்கி லேயே அவர் விவசாயிகள் பற்றி கதைக்கின்றார்.

சுதந்திரக்கட்சி இன்று கீழ்த்தரமான அரசியலை முன்னெடுக்கின்றது. அரசுக்குள் இருந்துகொண்டு சகலவிதமான வரப்பிரசாதங்களையும் அனுபவிக்கும் அக்கட்சி, அரசின் திட்டங்களையே குழப்பியடிக்க முற்படுகின்றது. இத்தகைய கட்சிக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை அவசியம். அதனை எமது கட்சித் தலைவர்கள் செய்யவேண்டும் - என்றார். (ஒ,44)

# நிமலராஜனின் நினைவேந்தல் முன்னணியால் கடைப்பிடிப்பு




யாழ்ப்பாணம், ஒக்.21

2000 ஆம் ஆண்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜனின் 21 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் கட்சியின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

நினைவேந்தல் நிகழ்வில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வராசா கஜேந்திரன், மகளிர் அணித் தலைவி திருமதி. வாசுகி சுதாகரன் மற்றும் கட்சியின் செயற்பாட்டாளர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

## சேவைப் பிரமாணத்துக்கு

# அப்பாற்பட்ட வேலைகளை செய்ய உடன்படமாட்டோம்

## அ. உத்தியோகத்தர்கள் சங்கம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 21

தங்கள் சேவைப் பிரமாணத்துக்கு அப்பாற்பட்ட வேலைகளைச் செய்விப்பதற்கு தாம் உடன்படமாட்டோம் என்று, அகில இலங்கை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கும் அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்குமிடையில், முரண்பாடு ஏற்படும் வகையில் தாம் செயற்படமாட்டோம் என்றும் சங்கம் கடிதம் மூலமாகக் குறிப்பிட்டுள்ளது.

அதிபர்கள், ஆசிரியர்கள் தேசிய ரீதியாக மேற்கொள்ளும் போராட்டத்துக்கு தொழிற்சங்கம் என்ற ரீதியில் நாங்கள் அவர்களுக்கு மனப்பூர்வமான ஆதரவை வழங்குகின்றோம் என்றும் சங்கம் குறிப்பிட்டுள்ளது. (து)


## கிழவன்காடு கலாமன்றத்தின் கண்ணீர் பூக்கள்



அமரர் **சபாரத்தினம் சண்முகரத்தினம்**

எமது கலாமன்றத்தின் உபதலைவர் சபாரத்தினம் இராசநாயகம் அவர்களின் பாசமிகு சகோதரர் சபாரத்தினம் சண்முகரத்தினம் அவர்களின் பிரிவுத்துயர் அறிந்து அதிர்ச்சியடைந்துள்ள நாம் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா எல்லா வல்ல ஈழத்துச்சிதம்பர தில்லைக்கூத்தன் திருவடிகள் சேரப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**கிழவன்காடு கலாமன்றம்**
**காரைநகர்-யாழ் கிளை.**

**நிர்வாக சபையினர்,**
**ஆசிரியர்கள்,**
**மாணவர்கள், பெற்றோர்கள்.**

## 34 ஆம் ஆண்டு நினைவு தினம்



இந்திய இராணுவத்தினரால்,யாழ் போதனா வைத்தியசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் அன்புலன் சாரதியான **வைத்திலிங்கம் சண்முகலிங்கம்** உள்ளிட்ட 21 பேர் படுகொலை செய்யப்பட்டு 34 ஆம் ஆண்டு நினைவு தினமான இன்று அவர்களது ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**உரும்பிராய் கிழக்கு,**
**உரும்பிராய்.**

**தகவல்:**
**திருமதி.சண்முகலிங்கம் குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்



**திருமதி ஞானம்பாள் மதியாபரணம்**

**(ஓய்வுநிலை ஆசிரியை)**

அனலைதீவை பிறப்பிடமாகவும் நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட ஓய்வுநிலை ஆசிரியை திருமதி ஞானம்பாள் மதியாபரணம் நேற்று (20.10.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம்-காமாட்சி தம்பதியரின் மகளும். கம்பளை கனகரட்ணம் தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற மதியாபரணம் அவர்களின் மனைவியும், காலஞ்சென்றவர்களான திருநாவுக்கரசு, செல்லத்துரை, சதாசிவம் மற்றும் இராசம்மா, கனகம்மா, பரமலிங்கம், பாலசிங்கம் ஆகியோரின் சகோதரியும், மனோகரன் (கனடா), மனோரதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், ராஜஸ்ரீ, சுமதி ஆகியோரின் மாமியாரும், நிரோஷன், பிரணா, சிந்தியா, மயூரா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2021) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் இல.16, பண்டாரக்குளம் வீதி, நல்லூரில் குடும்ப நிகழ்வாக நடைபெற்று, பூதவுடல் செம்மணி மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நணபர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**வே.பொ.பாலசிங்கம்**
**(சகோதரன்)**



# பிரான்பற்றுக் கிராமம் நகரமாக மாற்றப்படும்

## தவிசாளர் ஜெபநேசன் உறுதியளிப்பு

யாழ்ப்பாணம்,ஒக்.21

பிரான்பற்றுக் கிராமத்தை நகரமயமாக்கும் திட்டங்கள் முன்மொழியப்பட்டுள்ளன என்று வலி. தென்மெற்குப் பிரதேச சபைத் தலைவர் அந்தோனிப்பிள்ளை ஜெபநேசன் தெரிவித்தார்.

பிரான்பற்றில் நவீன வடிவிலான முன்பள்ளிக் கட்டடம் கடந்த திங்கட்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் உரையாற்றிய அவர் மேலும் தெரிவிக்கையில்,

பண்டத்தரிப்பு, பிரான்பற்று உள்ளிட்ட 12 கிராமங்கள் இன்னும் இரு வருடங்களில் பண்டத்தரிப்பு பிரதேசசபையாக விரைவில் மிளிரும். அதற்கேற்ப முன்னோடித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சின் ஊடாக, இந்தத் திட்டம் வெற்றியளிக்கும்போது பிரான்பற்று கிராமம் ஒரு நகரத்துக்குரிய தோற்றத்தைப் பெறும்.

இன்னும் சொற்ப காலத்தில் பிரான்பற்றில் உள்ள அனைத்து சபை வீதிகளும் அழகாக முழுமை பெற்றுவிடும். விரைவில் எமது சபைக்குட்பட்ட நவீன தரம் கொண்ட சிறுவர் பூங்கா திறக்கப்படும். இதனால் சிறுவர்கள் முழு நன்மை அடைவர். இதனைவிட மயானமும் விரைவில் பிரான்பற்று நோக்கி நகர்த்தப்படும் - என்றார்.

ஆஸ்திரேலியா நாட்டை வசிப்பிடமாகக் கொண்ட சமூக ஆர்வலர் ஜெயக்குமார் சிவபுவனேந்திர ராஜாவின் 3.5 மில்லியன் ரூபா சொந்த நிதிப் பங்களிப்பில், பிரான்பற்று சிறி முருகன் முன்பள்ளி புனரமைப்பு இடம்பெற்றது.

நிகழ்வில் வலி.தென் மேற்குப் பிரதேச சபைத் தவிசாளர் அ.ஜெபநேசன், வலி.தென் மேற்குப் பிரதிப் பிரதேச செயலாளர் திருமதி.செல்வகுமாரி நேசரட்ணம் ஆகியோர் இணைந்து, நிதிப்பங்களித்தோர் மற்றும் காணி வழங்கியோரது நினைவுக் கற்கள் மற்றும் நவீன கட்டடடத்தை திறந்து வைத்தனர். கட்டட புனரமைப்பில் பணியாற்றிய தொண்டர்களுக்குப் பரிசில் பொதிகளும் வழங்கப்பட்டன. (ஒ-4-50)

உரப்பிரச்சினையில்

# மஹிந்தானந்தவை அரசு கைவிடாது

## மூன்றிலிரண்டு பெரும்பான்மை பலத்தை பிரயோகிப்போம்

**கொழும்பு, ஒக். 21**

**விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை முன்வைக்கப்படும் பட்சத்தில் அதனை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் தோற்கடிப்பதற்குத் தயார் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன தெரிவித்துள்ளது.**

உரத்தட்டுப்பாட்டு விவகாரத்தை அடிப்படையாகக்கொண்டு அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றை முன்வைப்பதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தயாராகிவருகின்றது.

இந்நிலையில் இவ்விவகாரம் தொடர்பில் அரச தலைமைக்கட்சியான சிறிலங்கா பொதுஜன பெரமுன உறுப்பினர்களிடம் வினவியபோது,

'விவசாயிகளுக்காக அல்ல அரசியல் செய்வதற்காகவே எதிரணி இவ்வாறு செயற்படுகின்றது. நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தால்கூட அதனை மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் தோற்கடிப்போம்' - என்றனர். (ஒ-44)

# இந்தியத் திரைப்படங்களும் வன்முறைகளுக்கு காரணம்

## விரிவுரையாளர் ரகுராம் சுட்டிக்காட்டு

இலங்கையில் தற்போது இடம்பெற்று வரும் ஒரு சில வன்முறைச் செயல்களுக்கு இந்தியத் திரைப்படங்களும் ஒரு காரணம் என்று யாழ்.பல்கலைக்கழக ஊடகக் கற்கைகள் துறைத் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் சி.ரகுராம் தெரிவித்தார்.

மதுசாரம் மற்றும் போதைப் பொருள் தகவல் நிலையத்தால் இணைய வழி ஊடாக நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டில் முன்வைக்கப்பட்ட ஆய்வு முடிவுகள் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தினமும் திரையரங்குகள், தொலைக்காட்சி வழியாகவும் எண்ணிறைந்த தமிழ்த் திரைப்படங்களை, பாடல்களை நாம் நுகர வேண்டிய ஒரு நிர்ப்பந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றோம். குறிப்பாக இளைஞர்கள் மத்தியில் ஏற்பட்டு வரும் மாற்றத்தை அவதானிக்க வேண்டியுள்ளது.

உண்மையில் தமிழ்த் திரைப்படங்கள் ஊடாக அறநெறிகள் பின்பற்றப்படுகின்றனவா என்பது மிகப் பெரிய கேள்வியாக உள்ளது. முக்கியமாக தமிழ்த் திரைப்பட உலகமானது, வர்த்தகமயமாக மாறியுள்ளது.

தமிழ்த் திரைப்படங்கள் போதைப் பொருள் தொடர்பாக முன்வைக்கின்ற காட்சிகள், எமது இளைஞர்களை மிக மிக அதிகமாகப் பாதிக்கின்றன.

திரைப்படங்கள் சொல்லுகின்ற செய்திகளை அப்படியே உள்வாங்குகின்ற ஒரு பலவீனமான போக்குஎங்களிடம் ஏற்படுகின்றது.

தமிழ்த் திரைப்படங்களிலே நாயகர்களானாலும் சரி, காட்சி அமைப்புகளானாலும் சரி எந்த திரைப்படங்களுமே போதைப் பொருள் பாவனையை ஊக்குவிக்கத் தவறுவதில்லை என்ற கசப்பான உண்மையை முன்வைக்க வேண்டியுள்ளது - என்றார். (ஒ-4-159)

# நடமாடும் சேவை மூலம் தடுப்பூசி



கொடிகாமம், ஒக். 21

தென்மராட்சியில் நடமாடும் சேவை மூலம் தடுப்பூசி ஏற்றும் நிகழ்வு இடம்பெற்றது.

தென்மராட்சிப் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கிராம அலுவலர் பிரிவுகளில் குறைவான தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்ட கிராம மக்களுக்கு இந்தத் தடுப்பூசி ஏற்றப்பட்டது.

இராமாவில் கிராம அலுவலர் பிரிவுக்கு கோயிலாமனை நாவலர் முன்பள்ளியிலும் கெற்பேலியில் பொது நோக்கு மண்டபத்திலும், பாலாவி கிராம அலுவலர் பிரிவுக்கு கச்சாய் மகா வித்தியாலயத்திலும், கல்வயல் கிராம அலுவலர் பிரிவுக்கு சிறீசண்முகானந்தா வித்தியாலயத்திலும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டன.

ஒவ்வொரு கிராம அலுவலர் பிரிவிலும் சுகாதார வைத்திய அதிகாரிகளின் பங்களிப்பில் சுகாதாரப் பிரிவினரால் தடுப்பூசிகள் வழங்கப்பட்டன.

கடந்த திங்கட்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரியின் மேற்பார்வையில் வீடுகளுக்கு அருகில் சென்று தடுப்பூசி ஏற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஒ-ரி-159)

# உர விவகாரத்தால் மேலும் நெருக்கடி

## சமத்துவக் கட்சி சுட்டிக்காட்டு

கிளிநொச்சி,ஒக்.21

உர விவகாரத்தில் அரசின் திடீர் அறிவிப்பு விவசாயிகளை நிலைகுலையச் செய்துள்ளது. இதனால் நாட்டுக்கு இன்னும் நெருக்கடியே ஏற்படும் என்று சமத்துவக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் கட்சியின் பொதுச் செயலாளர் மு. சந்திரகுமார் தெரிவிக்கையில்,

செயற்கை உரத்தை முற்று முழுதாகத் தடுத்து, இயற்கை உரப்பாவனையின் மூலம் விவசாயத்தை மேற்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட திடீர் அறிவிப்பானது விவசாயிகளை நிலைகுலையச் செய்துள்ளது. இதனால் லட்சக்கணக்கான விவசாயக் குடும்பங்களின் பொருளாதாரம் நிலைகுலைவதோடு, நாட்டின் பொருளாதாரமும் கீழிறங்கும்.

அத்துடன் உணவு உற்பத்தியிலும் பெரும் பின்னடைவு உண்டாகும் நிலை ஏற்பட்டிருக்கின்றது. அசேதனப் பசளைக்குப் பதிலாகச் சேதனைப் பசளைப் பாவனையை நாம் மறுப்பதற்கில்லை. ஆனால் அதைச் செய்வதற்கான கால அவகாசம் விவசாயிகளுக்கு வேண்டும்.

வரையறுக்கப்பட்ட அளவிலான உரப்பாவனைக்கான சூழலைப் பேணிக்கொண்டு, படிப்படியாக சேதனப்பசளைப் பாவனையை ஊக்கப்படுத்தும் பொறிமுறையே பொருத்தமானது. நாடு பொருளாதார நெருக்கடிக்குள்ளாகியிருக்கும் சூழலில் இது இரட்டை நெருக்கடியை உண்டாக்கும்.

இது பெரும்போகச் செய்கைக் காலமாகும். இந்தச் செய்கையில் பாதிப்பும், வீழ்ச்சியும் ஏற்படுமானால் அவர்கள் மீள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுவிடுவர். அதிலிருந்து விவசாயிகளால் உடனடியாக மீள முடியாது. பின்னர் அவர்களுக்கு நிவாரணமளிக்கும் நிலையே ஏற்படும்.

எனவே அரசு தன்னுடைய தீர்மானத்தைப் பரிசீலனை செய்து விவசாயிகளையும், விவசாயத்துறையையும் வளப்படுத்த வேண்டும்- என்றுள்ளது. (ஒ-4-214)

# இரணைமடுக்குளம் திறப்பு



கிளிநொச்சி,ஒக்.21

பெரும்போக நெற்செய்கையின் நீர்ப்பாசனத்துக்காக கிளிநொச்சி இரணைமடுக்குளம் நேற்றுமுன்தினம் திறக்கப்பட்டது.

இரணைமடுக் குளத்தின் கீழ் 21 ஆயிரம் ஏக்கருக்கு மேற்பட்ட நிலப்பரப்பில் காலபோக நெற்செய்கையில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

விவசாயிகளின் நன்மைகருதி ஆலய வழிபாடுகளின் பின்னர் இரணைமடுக்குளம் கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசனப் பணிப்பாளர் த.இராஜகோபுவால் திறக்கப்பட்டது.

குளத்தின் நீரை வீண் விரயமாக்காமல் சிறந்த முறையில் பயிர்ச் செய்கைக்குப் பயன்படுத்துமாறு விவசாயிகளிடம் கிளிநொச்சி நீர்ப்பாசனத் திணைக்களம் கேட்டுக்கொண்டுள்ளது. (ஐ-13)

# இலங்கையில் வறுமை 10.9 வீதமாக அதிகரிக்கும்

## உலக வங்கி எதிர்வுகூறல்




கொழும்பு,ஒக்.21

**இலங்கையில் இந்த வருடம் பொருளாதார வளர்ச்சி 3.3 வீதத்தாலும், வறுமை 10.9 வீதத்தாலும் அதிகரிக்கும் என்று உலக வங்கி எதிர்வு கூறியுள்ளது.**

கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியால் மக்களின் நாளாந்த வாழ்க்கை மற்றும் வறுமை ஆகியவற்றில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் இலங்கை அதன் பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்கு முக்கியத்துவம் வழங்க வேண்டிய 4 விடயங்கள் தொடர்பில் உலக வங்கி சுட்டிக்காட்டியுள்ளது.

இதுதொடர்பில் உலக வங்கியால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

இலங்கையில் முதலாவதாக விவசாய உற்பத்திகளையும், அதன்மூலமான வருமானங்களையும் அதிகரிப்பதற்கு முக்கியத்துவம் வழங்கப்பட வேண்டும்.

தற்போது கட்டமைப்பு ரீதியான நிலைமாற்றமொன்று இடம்பெற்று வருகின்றபோதிலும், அது துரிதமானதாக இல்லை.

அதேவேளை ஏற்றுமதியை மையப்படுத்திய வாய்ப்புக்கள் உள்ளடங்கலாக விவசாயிகளுக்கு ஆதரவளிக்கும் வகையிலான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவது அவசியம்.

இரண்டாவதாக பின்தங்கிய பிரதேசங்களில் பயிர்ச்செய்கையல்லாத, பிற தொழில் வாய்ப்புக்களை விரிவுபடுத்துவதற்கு முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். அவை மக்களின் வாழ்வாதாரத்துக்கு முக்கிய பங்களிப்பை வழங்குகின்றன.

மூன்றாவதாக நாடளாவிய ரீதியில் தொழிற்படையின் செயற்றிறனை விரிவாக்குவதற்கும், தொழிலின் தரத்தை மேம்படுத்தக்கூடியவாறான புதிய வேலைவாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் முக்கியத்துவம் வழங்க வேண்டும்.

நான்காவதாக ஒருமைப்பாட்டை வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

சுகாதாரம், கல்வி மற்றும் சமூக பாதுகாப்பு உள்ளடங்கலாக மனித மூலதனம் சார் காரணிகளில் முதலீடு செய்வதன் ஊடாக இலங்கைச் சிறுவர்களின் செயற்றிறனை மேம்படுத்தமுடியும். அதன் மூலம் பொருளாதார வளர்ச்சியை நோக்கி நகர முடியும் -என்றுள்ளது.

(ஒ-4)

### வழிப்பறிக் ...

வட்டுக்கோட்டை, அச்சுவேலி, சுன்னாகம் உட்பட 5 இடங்களில் வீதியில் பயணித்தவர்களிடம் தங்க நகைகளை அறுத்துச் சென்றனர் என்று விசாரணையில் தெரியவந்துள்ளது.

தெல்லிப்பழை மற்றும் ஏழாலையைச் சேர்ந்த 20 - 25 வயதுடைய நான்கு பேரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களிடமிருந்து நகைகளைக் கொள்வனவுசெய்த சுன்னாகத்தில் உள்ள நகைக்கடை உரிமையாளர் ஒருவரும் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 6 தங்கப் பவுண் எடையுடைய 5 சங்கிலிகள் மீட்கப்பட்டுள்ளன. அதுமட்டுமன்றி, வழிப்பறிக்குப் பயன்படுத்தப்பட்ட இரண்டு மோட்டார் சைக்கிள்களும் கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அச்சுவேலி பொலிஸ் பிரிவில் கடந்த 16ஆம் திகதி வீதியில் சென்ற பெண் ஒருவரிடம் தங்கச் சங்கிலி அறுக்கப்பட்டது. மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே இந்த வழிப்பறியில் ஈடுபட்டிருந்தனர்.

அன்றையதினம் இளவாலை மற்றும் சுன்னாகம் பகுதிகளிலும் வீதியில் சென்ற இருவேறு நபர்களிடம் தங்க நகைகள் அறுக்கப்பட்டன.

சம்பவங்கள் தொடர்பில் அச்சுவேலி, சுன்னாகம் மற்றும் இளவாலை பொலிஸ் நிலையங்களில் வழங்கப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பில் யாழ்ப்பாணம் பிராந்தியத்துக்குப் பொறுப்பான மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழ் இயங்கும் தலைமைப் பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர்.

முதலில் இரண்டு சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டனர். அவர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் மேலும் இரண்டு சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

மூன்று வழிப்பறிச் சம்பவங்களுடன் வட்டுக்கோட்டையில் ஒருவரிடமும் மருதனார்மடத்தில் வியாபாரி ஒருவரிடமும் தங்க நகைகள் அறுத்ததை சந்தேக நபர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(து-25)

### இன்றும் ...

மாவட்ட அதிபர் சங்கம் ஒருமித்தமனதாக முடிவெடுத்துள்ளது.

கடிதம் ஒன்றினூடாக சங்கம் இந்த அறிவிப்பை விடுத்துள்ளது.

எனவே, இந்த முடிவை மீறி எந்தவொரு ஆசிரியருக்கேனும் அவர்களின் அதிபரால் எதிர்வரும் 21, 22 ஆகிய நாள்களில் (இன்றும் நாளையும்) பாடசாலைக்கு சமுகமளிக்குமாறு அழுத்தம் தரப்படுமாயின் தமக்கு தெரியப்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட அதிபர் சங்கத்தின் செயலாளர் விக்னராசா தெரிவித்துள்ளார்.

அத்தகைய அழுத்தங்களுக்கு முகம் கொடுக்கும் ஆசிரியர்கள், அதிபர் விக்னராசாவின் அலைபேசி எண்ணுக்கு அழைப்பெடுத்து முறையிடலாம். அவர்களுடன் நேரடித் தொடர்பு கொள்ளத் தயக்கம் இருப்பின் என் மூலமாகவோ அல்லது வேறு யார் மூலமாகவேனும் முறைப்பாடு செய்யலாம். எத்தகைய சூழ்நிலையிலும் முறைப்பாட்டாளர்களின் பெயர் வெளிப்படுத்தப்படமாட்டாது. - என்று சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, இன்றும் நாளையும் கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் எவருமே பாடசாலைகளுக்குச் செல்லமாட்டோம் என்றும் கிளிநொச்சி மாவட்ட அதிபர்கள் சங்கம் கடிதம் மூலமாக வலயக் கல்விப் பணிப்பாளருக்கு அறிவித்துள்ளது. (து-159)

### பட்டப்பகலில் ...

ளது என்று பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம், மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட யாவில் வீதி சாவற்கட்டு, ஆனைக்கோட்டை பகுதியில் நேற்று இடம்பெற்றது.

வீட்டிலிருந்தவர்கள் வெளியே சென்று திரும்பிவந்து பார்த்தபோது திருட்டு இடம்பெற்றமை தெரியவந்தது.

இந்தச்சம்பவம் குறித்து மானிப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (து-125)

### நல்லிணக்கம் ...

யின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸிடம் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில், அமைச்சரை மரியாதை நிமித்தமாக நேற்றுச் சந்தித்தபோதே தூதுவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

இதன்போது, இரு நாடுகளுக்கும் இடையேயான பலதரப்பட்ட ஒத்துழைப்பு மற்றும் நட்புறவை இரு தரப்பினரும் வரவேற்றதுடன், இருதரப்பு உறவுகளை மேலும் வலுப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினர் என்று வெளிவிவகார அமைச்சின் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதேவேளை, இருதரப்பு வர்த்தக விரிவாக்கம், முதலீடு, சுற்றுலாத் துறை உள்ளிட்ட விடயங்கள் குறித்தும் இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

இதன்படி வர்த்தக மற்றும் சுற்றுலாத் துறை உறவுகளை மேலும் பலப்படுத்தும் வகையில் கொழும்பு மற்றும் பாரிஸுக்கு இடையேயான நேரடி விமான சேவையை மீண்டும் ஆரம்பிக்கும் திட்டத்தை இருவரும் வரவேற்றுள்ளனர். (து-22)

# முல்லை. ஊடக அமையத்துக்கு புதிய அலுவலகம் திறந்துவைப்பு





முல்லைத்தீவு, ஒக். 21

முல்லைத்தீவு ஊடக அமையத்துக்கான புதிய அலுவலகம் கோலாகலமாக நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

முல்லைத்தீவு ஊடக அமையத்தின் தலைவர் சண்முகம் தவசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் ஊடக கற்கைகள் தலைவர் கலாநிதி சி.ரகுராம் ஊடக அமையத்தின் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார்.

அலுவலக கட்டடத்தை முல்லைத்தீவு மாவட்டச் செயலர் க.விமலநாதன் நாடாவெட்டி திறந்துவைத்தார்.

நிகழ்வில் சட்டத்தரணி எஸ்.தனஞ்சயன் மற்றும் யாழ். ஊடக அமைய நிறுவுனர் ஆர்.தயாபரன் மற்றும் வடக்கு மாகாண ஊடக அமைப்புகளின் தலைவர்கள், ஊடகவியலாளர்கள் பொதுஅமைப்புகளின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (து-19)



# மாணவனுக்கு சைக்கிள் கையளிப்பு

கிளிநொச்சி, ஒக். 21

பெண் தலைமைத்துவக் குடும்பத்தைச் சேர்ந்த மாணவன் ஒருவருக்கு துவிச்சக்கரவண்டி கையளிக்கப்பட்டது.

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட கரந்தாய் பகுதியைச் சேர்ந்த மாணவனுக்கே கடந்த திங்கட்கிழமை துவிச்சக்கரவண்டி வழங்கப்பட்டது.

இதனைப் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சுப்பிரமணியம் சுரேன், பிரதேச சபை உறுப்பினர் எஸ்.ரமேஸ் ஆகியோர் நேரில் சென்று கையளித்தனர். (ஒ-ரீ1-13)

# மரண அறிவித்தல்



## திருமதி நாகேஸ்வரி கயிலாயபிள்ளை

நுணாவில் மத்தி, சாவகச்சேரியைச் சேர்ந்த திருமதி நாகேஸ்வரி கயிலாயபிள்ளை அவர்கள் நேற்று முன்தினம் (19.10.2021) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் திரு.கயிலாயபிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், பாஸ்கரன் (கனடா), வசந்தி (கல்வி விவகார வெளியீடுகள் கிளை, யாழ். பல்கலைக்கழகம்), காலஞ்சென்ற பராகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், குமுதினி (கனடா), பேராசிரியர். இளங்குமரன் (யாழ். பல்கலைக்கழகம்), செல்வரதி (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும், வானதி (கனடா), தாரணி (கனடா), கௌசிகன் (சிட்னி), பார்த்திபன் (சிட்னி), பிரசாந்தன் (நியூசிலாந்து), பவித்திரா (நியூசிலாந்து), அபிநயா (கனடா), ஹரினி (கனடா) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (21.10.2021) வியாழக் கிழமை முற்பகல் 9.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக பூதவுடல் எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அறியத்தருகின்றோம்.

**தகவல்:**

**இ. வசந்தி - 076 837 8477,**

**பேராசிரியர் இளங்குமரன் : 077 728 6210**

**021 227 1648**

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 04 1946



மறைவு 20 10 2021

## வேலாயுதம்பிள்ளை சபாநாதன் (சபா)

அராலி கிழக்கைப் பிறப்பிடமாகவும் அராலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம்பிள்ளை சபாநாதன் அவர்கள் நேற்று (20.10.2021) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வேலாயுதம்பிள்ளை - வனிதலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற கந்தசாமி மற்றும் மனோன்மணி தம்பதியரின் மருமகனும் இராசலட்சுமி (ராணி)யின் அன்புக் கணவரும் நிறஞ்சனின் பாசமிகு தந்தையும் பிரதீபாவின் மாமனாரும் அட்ஷரா, யுகிஷரன், கபிஷரா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கருணைநாதன், நேசம் மற்றும் ஜெயம், மனோ ஆகியோரின் பாசமிகு சகோதரனும் கோபாலசிங்கம், சற்குணவதி, நிர்மலகுமார், பற்குணவதி, லதாஜினி, தயாளினி ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.10.2021) வியாழக்கிழமை காலை 8.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூனாவோடை இந்து மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**அராலி மத்தி , வட்டுக்கோட்டை.**
**தொ.பே: 0772370186**

**தகவல்: குடும்பத்தினர்.**

## தாக்குதல், விபத்தில் சிக்கிய 9 பேர் மருத்துவமனையில்

சாவகச்சேரி ஒக். 21

தென்மராட்சி பிரதேசத்தில் கடந்த சனி மற்றும் ஞாயிறு தினங்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்கள் மற்றும் தாக்குதல் சம்பவங்களில் 9 பேர் காயமடைந்தனர்.

வீதி விபத்துக்களில் சிக்கி மீசாலை கிழக்கைச் சேர்ந்த 30 வயது நபரும், கண்டி வீதி கொடிகாமத்தைச் சேர்ந்த 27 மற்றும் 34 வயது சகோதரர்களும், 47 வயது நபரும், 60 வயது தாய் மற்றும் 39 வயது மகன் ,சரசாலை தெற்கைச் சேர்ந்த 27 வயது நபர் மற்றும் எழுதுமட்டுவாழ் தெற்கைச் சேர்ந்த 57 வயது நபர் ஆகியோரும் காயமடைந்தனர்.

இதேவேளை, தாக்குதல் சம்பவத்தில் 34 வயதுடைய நபர் காயமடைந்தார். இவர்கள் அனைவரும் சிகிச்சைக்காக சாவகச்சேரி..ஆதார.. மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். (ஐ-9)

## கடலுணவு விற்பனையில் ஈடுபட்ட இருவருக்குத் தொற்று

சாவகச்சேரி,ஒக். 21

மிருசுவில், தவசிகுளம் பகுதியில் அனுமதியற்ற கடலுணவு விற்பனையில் ஈடுபட்ட ஆழியவளையைச் சேர்ந்த இருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

சுகாதாரப் பகுதியினர் கடந்த சனிக்கிழமை அந்தப்பகுதியில் திடீர் பரிசோதனை மேற்கொண்டு கடலுணவுகள் வியாபாரத்தில் ஈடுபட்ட 13 பேருக்கு எழுமாற்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இவர்களில் ஆழியவளையைச் சேர்ந்த வியாபாரிகள் இருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ-9)


## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கிவரும் கம்பனிக்கு மேசன், கூலி மற்றும் Welding பழக விரும்புபவர்கள் தேவை.

தொலை பேசி இல. **077 216 7459**

## காணி தேவை

மந்திகை ஆஸ்பத்திரியை அண்டிய பகுதியில் காணி அல்லது கடை, விலைக்கு அல்லது வாடகைக்கு தேவை.

தொடர்பு: **076 717 1280**


# மரண அறிவித்தல்



## சுகிர்தலட்சுமி பூபாலசிங்கம்

யாழ். அராலி வடக்கு செட்டியார் மடத்தைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் கிழக்கு உடையார் ஒழுங்கையை வதிவிடமாகவும் கொண்ட சுகிர்தலட்சுமி பூபாலசிங்கம் அவர்கள் கடந்த (18-10-2021) திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான நாகரட்ணம் சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான கந்தையா பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற பூபாலசிங்கம் அவர்களின் ஆருயிர்த் துணைவியும், அருந்ததி (கனடா), தமயந்தி (இலங்கை), அருட்சுணன்(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ஆராவமுதன் (கனடா), பிரதீபா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும்,காலஞ்சென்ற புனிதவதி, விக்னேஸ்வரன், நித்தியலட்சுமி, மகேசன், சிற்சபேசன், சாந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தேவராஜன், சிவானந்தமலர், காலஞ்சென்ற இராமச் சந்திரன், லங்காதேவி, ஜெகதீஸ்வரி, டேவிற் மனோ ஆகியோரின் அன்பு மைத்துனியும், பிரணன் (கனடா), அஸ்வின், பிரவின், ஷிரேயா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22-10-2021) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் கொக்குவில் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**உடையார் லேன்,**
**பொற்பதி வீதி**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



**அன்னை மடியில் 18.06.1967**

**இறைவன் அடியில் 22.09.2021**

## அமரர் ஆலாலசுந்தரம் முருகானந்தன்

(ஆசிரியர், யா/ பரியோவன் கல்லூரி)

யாழ் வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் யாழ் சோமசுந்தரம் அவனியுவை வசிப்பிடமாகவும் கொண்ட ஆலாலசுந்தரம் முருகானந்தன் அவர்கள் கடந்த (22.09.2021) புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு நாம் துயருற்று இருந்த வேளையில் நேரில் வந்தும், தொலைபேசியூடாகவும், முகநூல் மற்றும் மின்னஞ்சல் மூலமாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும், துயர் பகிர்ந்தவர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் மற்றும் தேவையான உதவிகளைச் செய்த அன்பு நெஞ்சங்களுக்கும் எமது குடும்பத்தின் சார்பாக மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


அன்னாரின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நாளை (22.10.2021) வெள்ளிக் கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும். இவ்வழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**46, சோமசுந்தரம் அவனியு,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

மலர்வு 21 . 03 . 1945



உதிர்வு 17 . 10 . 2021

### அமரர் திருநாவுக்கரசு நாகச்சந்திரன்

வண்: வட மேற்கு ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், ஆலடி ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருநாவுக்கரசு நாகச்சந்திரன் கடந்த (17.10.2021) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்து விட்டார்.

அன்னாரின் பூதவுடல் கடந்த (18.10.2021) திங்கட்கிழமை எருக் கலம்பட்டி (காக்கைதீவு) இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**ஆலடி,**
**ஆனைக்கோட்டை.**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**077 935 6158**

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 14 . 11 . 1956



மறைவு 21 . 10 . 2018

### பேரின்பநாதன் சாரதாதேவி (லலி - வேலணை)

**அம்மா என்ற அழைப்பு ஓயாது என்றுமே....**

காலங்கள் மூன்று உருண்டு ஓடினாலும்
அம்மாவின் நினைவுகள் என்றும் ஓயாது...
மாற்றங்கள் பல கண்டாலும்
மாறாத பாசம் தாய் பாசம் மட்டுமே...

கோபம் கண்டதில்லை எங்கள் அம்மா - உங்கள்
பாசமும் பணிவான அறிவுரையும் சிரித்த முகமும்
நம் வாழும் நாட்களுக்கான படிக்கற்களாகவும்
வாழ்க்கைத் தூண்களாகவும் மாறியது அம்மா.....

பொறுமைக்கு உதாரணமாக விளங்கினீர்கள் - அம்மா
பொறுமை இழந்து ஏன் எம்மை விட்டு
தொலை தூரம் சென்றீர்கள் அம்மா - இன்றும்
தவிக்கின்றோம் நீங்கள் இல்லாத வெறுமையை

அம்மா என்ற வீட்டுக்குள் வாழ்ந்த நாங்கள்
என்றும் உங்கள் அரவணைப்பிலேயே
வாழும் பிள்ளைகளுக்கு காலத்தாலும்
அழிக்க முடியாத பாதுகாப்பு எல்லை எங்கள் அம்மா...

மூன்று உலகத்தில் வாழ்ந்த எங்கள் அம்மா
சொர்க்கம் சென்ற போதிலும் நீங்கள்
தொட்டு விட முடியாத உண்மை உணர்வுகளாக
பிள்ளைகள் உலகத்தில் வாழ்கின்றீர்கள் அம்மா....

அருகில் இருந்த போதும் அம்மா என்று
அழைக்க ஒரு நாளும் மறந்ததில்லை - அம்மா
இன்றும் எங்கள் நாட்கள் அம்மா
என்று அழைக்காமல் விடிந்ததில்லை அம்மா...

கல்வி பாடமும் வாழ்க்கைப் பாடமும்
மாலைநேரத்தில் ஊட்டி வளர்த்த அம்மா
வாழ்க்கை வாழும் போதும் உங்கள்
பாடமே வழிகாட்டியாக முன் செல்லுகிறது அம்மா.....

எங்கள் அம்மாவை மீண்டும் சந்திப்போமா....
நிச்சயம் சந்திப்போம் அம்மா....

**தாய் மடிக்கு ஏங்கும் பிள்ளைகள்**
**பிரசாந்தன் (யாழ்), துசிக்கா (கனடா), ருசாந்தன் (சுவீடன்)**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 02.04.1975

மறைவு 21.09.2021

கடந்த 21.09.2021 செவ்வாய்க்கிழமை சிவபதம் அடைந்த
எமது குடும்பத் தலைவர்

அமரர் லயன் தேசமானிய
### பாலசுப்பிரமணியம் பிறேம்லால் J.P
(மக்கள் வங்கி)

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று முன்தினம் (19.10.2021) செவ்வாய்க்கிழமை கீரிமலை புனித தீர்த்தக்கரையில் நடைபெற்றன. வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (21.10.2021) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெறும் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இல. 04, கலைமகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

## மரண அறிவித்தல்

பிறப்பு 24 . 04 . 1972



இறப்பு 14 . 10 . 2021

### சிங்கராசா பார்த்தீபன்

யாழ். கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், டென்மார்க் Nyborg ஐ வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராசா பார்த்தீபன் அவர்கள் கடந்த (14-10-2021) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சிங்கராசா - கதிரமலர் தம்பதிகளின் சிரேஸ்ட புத்திரரும், காலஞ் சென்ற செல்லையா - இலட்சுமிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும், அகிலேஸ்வரி அவர்களின் ஆருயிர்க் கணவரும், தனுஷன், சுசீனா ஆகியோரின் அன்புத் தந்தையும், டேனி (Danny) அவர்களின் அன்பு மாமனாரும், சுபாஜினி (பிரான்ஸ்), காலஞ்சென்ற ஜெகதீபன், ஜெகதீசன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு சகோதரரும், வவிலோகநாதன் (பிரான்ஸ்), அனிஸ்தா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், திவிப்பிரியன், திலோசன் ஆகியோரின் அன்பு மாமனாரும், நைனிகா, நிகில் ஆகியோரின் பெரியப்பாவும், அஜய் (Ajay) அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் கிரியைகள் இன்று (21.10.2021) வியாழக்கிழமை முற்பகல் 9.00 தொடக்கம் நண்பகல் 12.00 மணிக்கும் Nyborg Kirkegårdskapel Kronprinsensgade 34, 5800 Nyborg, Denmark நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நாட்டின் தற்போதைய அசாதாரண சூழ்நிலை காரணமாக குடும்ப உறுப்பினர்கள் மட்டுமே தகன நிகழ்வில் கலந்துக்கொள்ள முடியும்.

**தொடர்புகளுக்கு**
**தனுஷன் - மகன் : + 4542731151**
**தீசன் - சகோதரன் : + 33651266651**
**சிறிகாந்தன் - சகோதரன் : + 33646589138**
**சுதா - சகோதரன் : + 4917885365 49**
**தர்மினி - சகோதரி : + 94778485443**

**தகவல்**
**குடும்பத்தினர்**
**அம்பகர் லேன்,**
**கொக்குவில் கிழக்கு,**
**கொக்குவில்.**

## வடக்கில்...

எனவே, வடக்கு மாகாணத்துக்கு குறுகியகால இடைவெளியில் செறிவான மழை கிடைக்குமானால் வெள்ளப் பெருக்குக்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன. இவ்வாறு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் புவியியற்றுறை மூத்த விரிவுரையாளர் நா.பிரதீபராஜா எதிர்வுகூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்ததாவது:

இந்துசமுத்திர பிராந்தியத்தில் இருந்து தென்மேற்கு பருவக்காற்று நேற்றுமுன்தினத்துடன் விலகிவிட்டது. நேற்று முதல், காற்றின் நகர்வு கிழக்கில் இருந்து மேற்கு நோக்கியதாக அமைந்தது.

வடகீழ்பருவப்பெயர்ச்சி மழை நாளை தொடங்கும் என்று மாதிரிகள் காட்டுகின்றன. இது எதிர்வரும் 27ஆம் திகதி வரையில் நீடிக்க வாய்ப்பு உள்ளது.

பசுபிக் பிராந்தியத்தில் நிலவும் லா நினோவின் நிலைமைகளும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தின் இரு முனையிலும் எதிர்மறையாக இருப்பதன் காரணமாக இந்த வருட வடகீழ் பருவப் பெயர்ச்சி மழையின் அளவு சராசரியைவிட உயர்வாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்து சமுத்திர மேற்பரப்பு வெப்பநிலையின் நீண்டகால எதிர்வுகூறலும் இதற்குச் சாதகமான தன்மையையே காட்டுகின்றது.

இந்த ஆண்டு வடகீழ் பருவக்காற்று மழை 6 சுற்றுக்களாக கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. குறிப்பாக இந்தப்பருவ மழையின் 60 சதவீதமான பகுதி நவம்பர் 25ஆம் திகதி தொடக்கம் டிசெம்பர் 10ஆம் திகதி வரையான காலப்பகுதியில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஆண்டு வங்கக்கடலில் ஐந்துக்கும் மேற்பட்ட தாழமுக்க நிகழ்வுகள் உருவாக வாய்ப்புள்ளது. இவற்றில் ஒன்றிரண்டு புயலாக மாறவும் வாய்ப்புள்ளது. அத்தோடு இந்த ஆண்டு வடகீழ் பருவப் பெயர்ச்சி மழையின் செறிவு உயர்வாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே எமக்கு குறுகிய கால இடைவெளியில் செறிவான மழை கிடைக்குமாகையால் வெள்ள இடருக்கான வாய்ப்புக்கள் அதிகமாக உள்ளன.

வெள்ள இடர் தணிப்பு நடவடிக்கைகளை முன்கூட்டியே மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ஒ-5)

## மாகாணத் தடை 31வரை நீடிப்பு...

கொழும்பு, ஒக். 21

நாட்டில் மாகாணங்களுக்கிடையில் தற்போது நடைமுறையிலுள்ள பயணத்தடை எதிர்வரும் 31 ஆம் திகதி அதிகாலை 4 மணிவரை நீடிக்கப்பட்டுள்ளது என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச இதற்கான உத்தரவை பிறப்பித்துள்ளார்.

நாடுமுழுவதும் நடைமுறையிலிருந்த தனிமைப் படுத்தல் ஊரடங்கு சட்டம் ஒக்ரோபர் முதலாம் திகதி நீக்கப்பட்டது. எனினும், மாகாணங்களுக்கிடையிலான பயணக் கட்டுப்பாடு நீடிக்கப்பட்டு வருகின்றது.

இதன்படி ஒக்ரோபர் 21 ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை மாகாணத்தடை நீடிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்தநிலையிலேயே அதனை ஒக்ரோபர் 31 வரை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, மாகாணங்களுக்கிடையில் அத்தியாவசிய சேவைகளின் நிமித்தம், உரிய அனுமதியுடன் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-44)

## தொற்று 537சாவு 18...

கொழும்பு, ஒக். 21

இலங்கையில் நேற்று 537 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதன்படி நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 33 ஆயிரத்து 303 ஆக எகிறியுள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 360 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 93 ஆயிரத்து 674 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை- இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் மேலும் 18 பேர் சாவடைந்துள்ளனர்.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் நேற்று முன்தினம் இந்தச் சாவுகள் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன என்று அரச தகவல் திணைக்களம் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர்களில் 11 ஆண்களும், 07 பெண்களும் அடங்குகின்றனர்.

இதன்படி நாட்டில் இதுவரையில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தோரின் மொத்த எண்ணிக்கை 13 ஆயிரத்து 543 ஆக அதிகரித்துள்ளது. (த-22)

## வடக்கு ...

பிராந்தியங்களுக்கே வழங்கப்படும். நாம் எம்மைப் பாதுகாத்துக் கொள்ளும் காலம் கூட்டு சமஷ்டியில்தான் வரும்.

இவ்வாறு வலியுறுத்திக் கூறியுள்ளார், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன். அவர் அனுப்பிய கேள்வி பதில் அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

**கூட்டுச் சமஷ்டியில் சுய ஆட்சி**

சமஷ்டி முறையில் மத்திய அரசின் உள்ளீடு வெகுவாக இருக்கும். ஆனால். கூட்டு சமஷ்டியில் தனி அலகுகள் தம்மைத் தாமே ஆட்சிசெய்துகொண்டு ஒரு சில காரணங்களுக்காக மட்டுமே மத்தியுடன் ஒத்துழைக்கும் விதத்தில் அமைவன. சமஷ்டி, கூட்டுச் சமஷ்டி இடையேயான வேற்றுமைகளை கோடிட்டுக் காட்டுவது சிரமம். ஆனால் பொதுவாக மத்திய அரசானது கட்டுப்படுத்தப்பட்ட குறைந்த அதிகாரங்களையே கூட்டு சமஷ்டியில் பெற்றிருக்கும். நாட்டின் பாதுகாப்பு, வெளியுறவுக் கொள்கைகள் மேலும் சில சில்லறை அதிகாரங்கள் போன்றவை மத்தியிடம் இருப்பன. ஒரு விசேட அம்சமாக குறிப்பிடுவதென்றால் மத்திய அரசாங்கத்துக்கு கூட்டுச் சமஷ்டியின் கீழ் நேரடியாக இறைவரியை தனிக் குடிமக்களிடமிருந்து பெறமுடியாது. பதிலாக அவற்றை பிராந்திய அரசுகள் மூலமாகவே பெறவேண்டியிருக்கும். நாட்டின் தனி மனிதர்களை ஆட்டிப்படைக்கும் அதிகாரம் மத்திய அரசுக்கு இருக்காது. தற்போது ஒற்றையாட்சியின் கீழ் எங்கள் வளங்கள் பறிபோகின்றன. காணிகள் பறிபோகின்றன.

**தடுக்கமுடியும்**

கூட்டுச்சமஷ்டி மூலமாக பொலிஸ் உரித்துக்கள், காணி உரித்துக்கள், பிராந்திய உள்நாட்டுப் பாதுகாப்பு அனைத்தும் பிராந்திய அலகுகளுக்கே வழங்கப்படும்.

**பணம் பறிக்கவும் தகவல் திரட்டும் படைகள்**

படையினர் தாயகத்தில் நிலைகொண்டுள்ளதால் பெரும் பாதிப்புகள் ஏற்பட்டுவருகின்றன. படையினர் வடக்கு மாகாண மக்களின் நடமாட்டங்கள், அவர்கள், உள்ளூரில் எவர் எவருடன் தொடர்பு வைத்துள்ளார்கள், அவர்களுக்கு யார் யாருடன் வெளிநாட்டுத் தொடர்பு இருக்கின்றது என்பவை சம்பந்தமான முழு விவரங்களையும் சேகரிக்கின்றார்கள். இவை உத்தியோகபூர்வ காரணங்களுக்கே என்று நாம் நினைக்கக்கூடும். ஆனால் பணம் பறித்தல், கடத்தல் போன்ற பல காரியங்களுக்கும் இவ்வாறான தரவுகள் பாவிக்கப்படுகின்றன. இங்குள்ளவர்கள் வெளிநாட்டுத் தமிழர்களுடன் தொடர்பு கொள்ளும்போது அவர்கள் புலிகள் இயக்கத்துடன் முன்னர் தொடர்புடையவர்கள் என்று கண்டால் உடனே இங்குள்ளவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்ய படையினர் உதவுகின்றார்கள்.

**சுயநலன்கருதியே இராணுவம் உதவி**

உள்ளூர் மக்கள் பலரின் வறுமையைக் கருத்திற்கொண்டு அவர்களுக்கு இராணுவத்தினர் சில நன்மைகளைச்செய்து, அவர்களைத் தமது கையாள்களாக, தமிழ் மக்களுக்கு எதிராக மாற்றுகின்றார்கள்.

இவை யாவற்றையும் முறியடிக்க வேண்டுமானால் கூட்டு சமஷ்டி எமக்கு அவசியம்.

**தாழ்வு மனப்பான்மையில்**
**பெரும்பான்மையின தலைவர்கள்**

இலங்கையில் பெரும்பான்மையினத் தலைவர்கள் தாழ்வு மனப்பான்மைக்கு உட்பட்டுள்ளார்கள். தமது இனம் இலங்கை நாட்டில் பெரும்பான்மை என்றாலும் பக்கத்தில், தமிழ் நாட்டில், பல கோடி தமிழர்கள் வாழ்ந்து வருவதால் தமக்கு எந்தக் காலத்திலும் பாதிப்பு ஏற்படக்கூடும் என்ற எண்ணத்தில் இலங்கை வாழ் சிறுபான்மையினரைச் சந்தேகக்கண் கொண்டு பார்க்கின்றார்கள். தமது தாழ்வு மனப்பான்மையின் நிமித்தம் அவர்களை எழவிடாமல் தடுக்க வேண்டும் என்று சிந்திக்கின்றார்கள். அதனால் தம்முடன் சேரும் சிறுபான்மை இன மக்களையும் அவர்களே வழிநடத்துகின்றார்கள். இதற்கு நல்ல உதாரணம், இதுவரை காலமும் பெரும்பான்மைக் கட்சிகளுடன் சேர்ந்து பயணித்த தமிழ்த் தலைவர்களே. பாகுபாட்டுக்குட்படும் சிறுபான்மையினரை இவர்களால் சட்ட ரீதியாகக் காப்பாற்ற முடியாது போய்விட்டது. தனிப்பட்டவர்களை அவர்கள் காப்பாற்ற முடியும். ஆனால் இனங்களின் உரித்துக்களைப் பெற்றுத் தரமுடியாது - என்றுள்ளது. (த)

## கொரோனா ...

தம் கொள்ள முடியாது. ஆனால், மக்களின் அண்மைக் காலச் செயற்பாடுகளை அவதானிக்கையில், நாடு கொரோனா வைரஸ் பரவல் அச்சுறுத்தல் நிலையில் இல்லாததைப் போன்ற எண்ணப்பாட்டில்தான் மக்கள் செயற்பட்டுக் கொண்டிருந்தனர்.

நாட்டைத் திறக்க பல்வேறு காரணிகள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக நாட்டின் பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் மக்களின் வாழ்வாதாரம், பணிகள், மாணவர்களின் கல்வி போன்ற அத்தியாவசிய செயற்பாடுகளைக் கருத்திற்கொண்டே நாட்டைத் திறக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதே தவிர, சுகாதார வழிமுறைகளை மீறிய மக்களின் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக அல்ல. இப்போது வழங்கப்பட்டுள்ள வாய்ப்புகளைத் தவறாகப் பயன்படுத்திக்கொண்டு, மக்களின் பொறுப்பற்ற செயற்பாடுகள் காரணமாக மீண்டும் கொரோனா வைரஸ் பரவினால் நாட்டை முடக்குவதைத் தவிர வேறு மாற்றுத் தெரிவுகள் இருக்கப்போவதில்லை.

டெல்டா வைரஸ் பரவல் கட்டுப்பாட்டுக்குள் வரவில்லை. கொரோனா வைரஸ் வேறு திரிபுகளை ஏற்படுத்திக் கொண்டு வீரியத்தை அதிகரித்துக் கொண்டு வேகமாகப் பரவலாம்.

அவ்வாறான நிலைமை உருவானால் நாட்டை மூடுவது மட்டுமே தெரிவாக இருக்கும். எனவே, இதனால் சகல மக்களும் நாடும் பாதிக்கப்படும் நிலை உருவாகும்.

இப்போது நாட்டின் பொருளாதாரம், மக்களின் வாழ்வாதாரத்தைக் கருத்திற்கொண்டே நாடு திறக்கப்பட்டுள்ளதே தவிர, மக்கள் குதூகலமாக விடுமுறைகளை வழமைபோன்று கொண்டாடுவதற்கு அல்ல. இவ்வாறான மோசமான செயற்பாடுகள் காரணமாக மக்களே பாதிக்கப்படப் போகின்றனர்" - என்றார். (த-22)

## கிளிநொச்சி...

முதியவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து, ஏ-9 வீதி, 155ஆம் கட்டைப்பகுதியில் நேற்றுக்காலை 8.30 மணிக்கு இடம்பெற்றது.

சம்பவத்தில், யாழ்ப்பாணம் தொண்டைமானாறு பகுதியைச் சேர்ந்த பழனி மகேந்திரம் (வயது - 70) என்பவரே உயிரிழந்தார்.

அவர், கிளிநொச்சி 155ஆம் கட்டை பகுதியிலுள்ள தனது மகள் வீட்டுக்குச் சென்றிருந்தபோது குறித்த விபத்து இடம்பெற்றது. மற்றைய மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் படுகாயங்களுக்குள்ளான நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.

விபத்து தொடர்பாக கிளிநொச்சி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (த)

## புலனாய்வாளர்கள்...

லடி பகுதியைச்சேர்ந்த சுப்பையா வசந்தன் (வயது - 28) என்பவரே காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

பூநகரியிலிருந்து படகு மூலம் வேலணைக்கு சென்ற 3 மீனவர்களை வழிமறித்த கடற்படை புலனாய்வாளர்கள், “கஞ்சா கடத்தவா வந்தீர்கள்?“ என்றுகேட்டு கடுமையாகத் தாக்கியுள்ளனர். சம்பவ இடத்திலிருந்து மேலும் 2 மீனவர்கள் தப்பிச் சென்றுவிட்டனர். காயமடைந்தவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (த)

## 25 ஆம் திகதியிலிருந்து..

ஊடக நிகழ்ச்சி ஒன்றில் நேற்றுக்காலை கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். நாளை தொடக்கம் நான்கு கட்டங்களாக பாடசாலைகளில் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்வதுதொடர்பில்தற்போதுதீர்மானிக்கப்பட்டுள்ளது. ஆசிரியர்கள் சேவைக்கு சமுகமளிக்காமை தொடர்பில் எந்தவித மனக்கசப்பும் இல்லை. அனுகூலமாக தீர்மானம் ஒன்றை நோக்கிப் பயணிக்க தாம் எதிர்பார்க்கின்றோம் என்றும் செயலர் மேலும் தெரிவித்தார். (த-இ)

© 2000 Agfa-Gevaert N.V.

மோசமான போர்ம் தொடர்ந்தால்

# அணியிலிருந்து வெளியேறுவேன்

மோர்கன் வெளிப்படை



லண்டன், ஒக். 21
மோசமான போர்ம் தொடர்ந்தால், விளையாடும் பதினொருவர் கொண்ட குழாமிலிருந்து வெளியேறுவேன் என்று இங்கிலாந்து அணியின் தலைவரான மோர்கன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் எப்போதும் கூறுவதுபோல், நான் அணியில் ஒரு வாய்ப்புக்குரிய வீரர்தான். உலகக் கிண்ணத்தை வெல்லும் இங்கிலாந்து அணியின் பாதையில் இடையூறாக இருக்கமாட்டேன். என்னுடைய துடுப்பாட்டம் மோசமாக இருக்கிறது. ஓட்டங்களைச் சேர்க்க முடியவில்லை என்பது தெரியும்.

ஆனால், என்னுடைய தலைமைத்துவம் சிறப்பாக இருக்கிறது, அது அப்படியே செல்லும் என்பதுதான் என்னுடைய பதில். அதே நேரம் என்னுடைய துடுப்பாட்டம் தொடர்ந்து மோசமாக அமைந்தால், நான் பதினொருவர் கொண்ட குழாமிலிருந்து வெளியேறுவேன். சிலதிறமையான இளம் வீரர்கள் அணிக்குள் வந்திருக்கிறார்கள். இவர்களின் வருகையால் அணி மேலும் வலிமையடைந்துள்ளது - என்றார். (ம)



# ரோகித், ராகுல் ஆரம்ப வீரர்கள்

கோலி உத்தியோகபூர்வமான அறிவிப்பு

**டுபாய், ஒக். 21**
**ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக ரோகித், கே.எல்.ராகுல் இருவரும் களமிறங்குவார்கள் என்று அறிவித்தார் இந்திய அணியின் தலைவரான கோலி.**

ரி-20 ஆட்டங்களில் இந்திய அணியின் ஆரம்ப வீரர்களாக கோலி, ரோகித் இருவரும்தான் களமிறங்கி வருகின்றனர். ஆனால், ஐ.பி.எல். தொடரிலும், அதைத் தொடர்ந்து நடைபெற்ற பயிற்சி ஆட்டங்களிலும் ராகுலில் ஆட்டம் வியக்கும்படி இருந்தது. ராகுலை அணிக்குள் எடுத்தால், ஆரம்ப வீரராகவே களமிறக்க வேண்டும். எனவே இந்தச் சிக்கல்களால், ராகுல், ரோகித் இருவரும் ஆரம்ப வீரர்களாகக் களமிறங்குவார்கள் என்று அறிவித்துள்ளார் கோலி.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.பி.எல்லுக்கு முன்பு சூழ்நிலைகள் வித்தியாசமாகவே இருந்தன. தற்போது லோகேஷ் ராகுலை முன்வரிசையில் இருந்து கீழே இறக்குவது கடினமானது. ரோகித் சர்மா உலகத் தரம் வாய்ந்த வீரர். பாகிஸ்தானுக்கு எதிரான தொடக்க ஆட்டத்தில் நான் மூன்றாவது வரிசையில் களம் இறங்குவேன். ரோகித் சர்மாவுடன் லோகேஷ் ராகுல் தொடக்க வீரராக விளையாடுவார்.

பயிற்சி ஆட்டத்தில் அனைவருக்கும் வாய்ப்பு கொடுக்க வேண்டும். அவர்களின் செயற்பாடுகளை நாங்கள் பார்ப்போம். ஒரு குழுவாக ஆற்றலையும், வேகத்தையும் உருவாக்குவது தான் தற்போது திட்டமாக இருக்கிறது. கடந்த காலத்தில் நாங்கள் சிறப்பாகச் செயற்பட்டு வெற்றிபெற்றுள்ளோம்- என்றார். (ம)

ரி20 உலகக்கிண்ணம்

# இங்கிலாந்து சம்பியனாகும்

வாகன் கணிப்பு



டுபாய், ஒக். 21
ரி-20 உலகக்கிண்ணத் தொடரில் இங்கிலாந்து கிண்ணம் வெல்லும் என்று தெரிவித்துள்ளார் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும் கிரிக்கெட் விமர்சகருமான மைக்கல் வாகன்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரி-20 உலகக்கிண்ணத் தொடரை வெல்ல இங்கிலாந்து அணிக்குதான் அதிகமான வாய்ப்பு இருப்பதாக நான் கருதுகிறேன்.

ஸ்ரோக்ஸ், ஆச்சர் இல்லாவிட்டாலும் அந்த அணி வலுவாக இருக்கிறது. மோர்கன் துடுப்பாட்டத்தில் சிறப்பாக இல்லாவிட்டாலும் அணியை வழிநடத்திச் செல்வதில் மிகவும் சிறந்தவர். ரி-20 உலக்கிண்ணத்தில் இந்தியாவின் நிலை குறித்து எனக்குத் தெரியவில்லை. இந்தியா, மேற்கிந்தியத் தீவுகள், பாகிஸ்தான், நியூஸிலாந்து அணிகள் இங்கிலாந்துக்கு கடும் சவாலாக இருக்கும். ஆஸ்திரேலியாவுக்கு மிகவும் குறைவான வாய்ப்பே இருக்கிறது - என்றார். (ம)



# விடத்தல்தீவு உதைபந்தாட்டக் கூடம் வைபவ ரீதியாக அங்குரார்ப்பணம்

மன்னார், ஒக். 21
விடத்தல்தீவு உதைபந்தாட்டக் கூடம் கடந்த திங்கட்கிழமை மாலை மன்னார் விடத்தல்தீவில் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

குறித்த உதைபந்தாட்டக் கூடத்தில் 22 வீரர்கள் கையெழுத்திட்டனர். மேலும் 20 வீரர்கள் விடத்தல்தீவு உதைபந்தாட்ட கூடத்தில் இணைந்து கொள்ள ஆர்வம் காட்டியுள்ளனர். முதல் பயிற்சி கடந்த திங்கட்கிழமை மாலை ஆரம்பிக்கப்பட்டதோடு, வீரர்களுக்கான சீருடைகளும் வழங்கப்பட்டன. (ம-56)

# இந்திய அணியின் தெரிவில் பனியின் தாக்கம் இருக்கும்!

தலைமைப் பயிற்சியாளர் ரவிசாஸ்திரி தெரிவிப்பு



புதுடில்லி, ஒக். 21
இந்திய அணித் தெரிவில் பனியின் தாக்கமும் கணிசமான அளவு கருத்தில் கொள்ளப்படும் என்று இந்திய அணியின் தலைமைப் பயிற்சியாளர் ரவிசாஸ்திரி தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரி-20 உலகக்கிண்ணத் தொடருக்கான இந்திய அணித் தெரிவில் பனியின் தாக்கம் அதிகம் இருக்கும். பனிப்பொழிவு மைதான சூழ்நிலை ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு அணித் தெரிவு அமையும். மேலும் கூடுதலாக சுழற்பந்து வீச்சாளர் அல்லது வேகப்பந்து வீச்சாளருடன் களம் இறங்குவது என்பது குறித்தும் முடிவு செய்வோம். கடந்த 2 மாதங்களாக இங்கு ஐ.பி.எல். போட்டியில் இந்திய அணி வீரர்கள் விளையாடி இருக்கிறார்கள். எனவே அவர்கள் அதிகளவில் தயாராக வேண்டும் என்று நான் நினைக்கவில்லை - என்றார். (ம)

**வீடு காணி விற்பனைக்கு**
கோப்பாய் இராச வீதியில் 10 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. பிரித்தும் கொடுக்கப்படும் மற்றும் நீர்வேலி சந்திக்கும் சிறுப்பிட்டிக்கும் இடையில் 5 1/2 பரப்பு காணியுடன் வீடும் விற்பனைக்கு உண்டு.
**தொடர்பு : 077 193 3490**



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 21.10.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.